Not for sale

நவம்பர் - டிசம்பர் 2015

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## நமது ஆவிக்குரிய புலன்கள்

பார்வை • செவிகொடுத்தல் • மனம்

தொடுவுணர்வு • சுவை

### நமது ஆவிக்குரிய புலன்கள்

# ஆதியிலே



நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கைக்கும், சுத்திகரிப்புக்கும் நம்முடைய ஆவிக்குரிய புலன்கள், ஒரு முக்கியமான பங்கீடாக உள்ளது என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் (எபிரெயர் 5:14). ஆகிலும், அவர் மேற்படியாக வேறெந்த விவரங்களையும் கூறவில்லை, நமக்கு அவைகளைப் பெயரிடவும் இல்லை. பாரம்பரியமாக, நம்முடைய ஆவிக்குரிய புலன்கள் திட்டவட்டமாக இல்லாமல், உறுதியற்று இருப்பதாக நாம் எண்ணுகிறோம்.

இந்த ஹெரால்டு பிரதியில், நாம் ஐந்து வெவ்வேறான ஆவிக்குரிய புலன்களைப்பற்றி பார்க்கப் போகிறோம். மேலும், தேவன், இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள், நம்முடைய ஆவிக்குரிய புலன்களை உவமானங்களின் வழியாக வெளிப்படுத்துவதை இது கூறுகிறது. வளர்ச்சியடையக்கூடிய உங்கள் விசுவாசம் வளம் பெறுவதற்கு, இந்த வசனங்கள் ஜீவனோடு, ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுக்கும் என்பதை எதிர்பார்த்து இந்த முழு பிரதியின் பாடங்களை அர்ப்பணிக்கிறோம்.

சிறந்த பலன் பெறுவதற்கு இந்தக் கட்டுரைகளை வரிசையாக படிக்கவும். நம்முடைய இடுக்கமான பாதையில், சிறிய துவக்கத்திலிருந்து வல்லமையாக, முழுமை அடைவதற்கும் நம்முடைய விசுவாசத்தின் வளர்ச்சியை காண்பதன் நோக்கத்தில் ஒவ்வொரு கட்டுரையும் சரியான வரிசையில் வைக்கப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடும் வரிசையில், "நம்முடைய ஆவிக்குரிய புலன்கள்" ஒரு துவக்கமாக உள்ளது. ஆனால் விவரமாக அல்ல. இந்தக் கருத்தை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு, இந்தக் கட்டுரை நமக்கு உதவி செய்யும். மேலும் ஒவ்வொரு ஆவிக்குரிய புலன்களுக்கு நங்கூரமான ஒரு வசனம் அதில் உள்ளடக்கியுள்ளது.

இயேசுவால், குணமாக்கப்பட்ட பார்வையற்ற ஒரு மனிதனின் தலைக்குள் நுழைய முயற்சிக்கும்போது, சில எதிர்பாராத திருப்பங்களை "பார்வை" என்ற தலைப்பு தருகிறது. கழுவும்படிக்கு அந்த குளத்திற்கு அருகில் அவர் நடந்து செல்கையில், அவரைச் சுற்றியிருந்த உலகம் அவர் காதுகளில் எவ்வாறு ஒலித்தது? இந்தக் கட்டுரையைப் படித்து முடித்தப்பின் உங்கள் தலையில் ஒரு பாடல் இருந்தால் நீங்கள் ஆச்சரியப்படாதீர்கள்,

சிக்கலானதும், மென்மையானதுமான கேட்கக்கூடிய புலன்கள், விசுவாசத்தின் இரண்டாவது நிலை என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு வலியுறுத்தியதின் காரணத்தைக் "கேட்கும் திறன்" என்ற தலைப்பு விளக்குகிறது. தேவன் என்ன கூறுகிறார் மற்றும் நாம் என்ன கேட்கிறோம், நாம் என்ன புரிந்துகொள்கிறோம் மற்றும் நாம் என்ன நினைவில் வைத்துக்கொள்கிறோம்? நாம் எதை மறுபடியும் கூறுகிறோம். நாம் தேவனுடைய சத்தத்திற்கு இசைந்திருக்கிறோமா? - என்பதே, தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுத்தலாகும்.

வேதாகமத்திலுள்ள சுகந்த வாசனை மற்றும் துர் நாற்றங்களாகிய இருமனங்களைப்பற்றி "மனம்" என்ற தலைப்பு விவரிக்கிறது. வேதாகமம் மனங்ளைக்குறித்து இன்னும் அதிக முக்கியமான குறிப்புகளை விவரிப்பதன் காரணத்தைக்குறித்த, உறுதியான ஆதாரங்களைத்தருகிறது - நம்முடைய பகுத்தறிவு, தேவனுடைய உண்மையான, சபையின் அங்கமாக இருக்க வேண்டுமானால், நம்முடைய கிறிஸ்துவ குணங்கள் தேவனுக்கேற்ற சுகந்த வாசனையாக இருக்க வேண்டும்.

ஏவாள், கீழ்ப்படியாமை என்ற அவளுடைய பாவத்தை எவ்வளவு எளிதாக தவிர்த்திருக்க முடியும் என்பதை, "தொடுணர்வு" என்ற தலைப்பின் விவரங்கள் உங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கும். அவளுடைய பாவங்களைக் கவனிப்பதன் வழியாகப், பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். தவறான காரியங்களைத் தொடும்போது என்ன நடக்கும் என்றும், நம்முடைய இருதயம் நல்ல காரியங்களைப் பற்றிக்கொள்வதற்கும் பயிற்சி பெறுவதற்கும் "தொடு உணர்வு" உங்களுக்குக் கற்பிக்கும்.

இயேசு அவருடைய ஊழியத்தின் துவக்கத்தின்போது தம்முடைய சீஷர்களை நோக்கி, என்னுடைய மாம்சத்தைப் புசித்து, இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென்று சொன்ன காரணத்தைச் "சுவை" என்ற தலைப்பு ளிப்படுத்துகிறது. இயேசு தம்முடைய ஊழயத்தின் முடிவில், நினைவுகூருதலின் அடையாளங்களை ஏற்படுத்தி, அவைகளைப் புரிந்துகொள்ளுதலுக்குப் பல அனுபவங்களை ஒன்றாகப் பின்னிக்கொடுத்து, இடையிலுள்ள பிளவை இயேசு துரிதமாக அடைத்தார். கடுமையான சுவிசேஷ வேலைகளை அப்போஸ்தலர்கள் உணர்வுள்ள பலத்தோடு செய்வதற்குத் தேவைப்படும் நேரடியான மற்றும் ஆவிக்குரிய பாடங்களை அந்த நினைவுகூருதலின் அடையாளங்கள் எவ்வாறு தருகிறது என்று நீங்கள் காணலாம்.

**நவம்பர் / டிசம்பர் 2015**


| | |
|---|---|
| **நமது ஆவிக்குரிய புலன்கள்** | 38 |
| ஒரு கண்ணோட்டம் | |
| **பார்வை** | 43 |
| புரிந்து கொள்வதற்கான துவக்கம் | |
| **செவிகொடுத்தல்** | 49 |
| சத்தியத்தைப்புரிந்துகொள்ளுதல் | |
| **வாசனை** | 55 |
| பாராட்டு | |
| **தொடுதல்** | 61 |
| நெருக்கம் | |
| **சுவை** | 65 |
| ஆழமாக உட்கொள்ளுதல் | |
| **தீர்க்கதரிசனத்தில் இன்று** | 69 |



Todd Alexander

# நமது ஆவிக்குரிய புலன்கள்

"பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபிரெயர் 5:11-14).

தேவனுடைய ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு ஆவிக்குரிய முதிர்ச்சி அவசியம் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக் கற்பிக்கிறார். நம்மை அங்குக் கொண்டுச் செல்ல உதவும்படிக்கு நாம் நன்மைக்கும் தீமைக்குமுள்ள வேறுபாட்டை அறிய பகுத்தறிவாகிய உபாத்தியைப் பயன்படுத்துகிறோம் என்று அவர் கூறுகிறார்.

எபேசியருக்கு அவர் எழுதின செய்தியில், இந்தப் பகுத்தறிவாகிய உபாத்தியை, "மனக் கண்கள்" என்று அழைக்கிறார். "தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்" (எபேசியர் 1:18).

இந்த ஆவிக்குரிய புலன்கள் எதைக்குறிக்கிறது? முதிர்ச்சி அடைவதினால் இவைகள் எவ்வாறு பலப்படும்? இவைகள் எவ்வாறு அமைக்கப்படுகிறது? நன்மை மற்றும் தீமைக்கு உண்டான வித்தியாசத்தைப் புரிந்துகொள்வதற்கு அவைகளை நாம் எவ்வாறு பழக்குவிப்போம்? நாம் அவைகளை எவ்வாறு தூண்டுவது ? அவைகள் நம்மை எவ்வாறு வழி நடத்தும் ?

இந்தப் பிரதி அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும்.நம்முடைய புலன்களாகிய - பார்வை, செவிகொடுத்தல், நுகர்தல், தொடுணர்வு மற்றும் சுவை - புலனுணர்வு, புரிந்துகொள்ளுதல் விருப்பம் மற்றும் அனுபவத்திற்குப் பொருந்தக்கூடியதை வசனங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதை அடுத்துவரும் ஐந்து கட்டுரைகள் தெளிவாக விவரிக்கும்.

அறியப்பட்ட பல வசனங்களை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு இந்தத் துவக்கக் கட்டுரை, நம்முடைய ஐந்து ஆவிக்குரிய புலன்களின் அனைத்து காரியங்களையும் ஆராய்ந்து பார்க்கும்.

**புலனுணர்வு மற்றும் புரிந்துகொள்ளுதல்**

ஆவிக்குரிய புலன்களுக்குப் பொருந்தக் கூடியவாறு தேவன் உருவகப்படுத்தின, காணக்கூடிய மற்றும் கேட்கக்கூடிய நமது இரு புலன்களை, தேவனுக்கும் லோகோசுக்கும் இடையில் நடந்த சம்பாஷணையில், தீர்க்கதரிசியாகிய ஏசாயா பதிவு செய்திருக்கிறார். "அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல். இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக்கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார்" (ஏசாயா 6:9-10).

இந்தத் திடமான ஆவிக்குரிய அதிகாரத்தோடு, நம்முடைய மாம்சத்தின் பார்வை நம்முடைய ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலையும் நம்முடைய மாம்சத்தின் கேட்கும் திறன், ஆவிக்குரிய உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதலையும் குறிக்கும் என்ற முடிவுக்கு வரலாம்.

**பகுத்தறிதல்**

இயேசுவின் பலியின் ஐசுவரியத்தையும், பரிசுத்தத்தையும் நமக்குப் புரியவைப்பதற்கு உதவியாக அப்போஸ்தலனாகிய பவுல் நுகர்வுணர்வை உருவகமாகப் பயன்படுத்துகிறார். "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 5:2). ஒரு காளையைப் பலிசெலுத்துவதற்கான கட்டளைகள் கொடுக்கப்பட்டபோது, இதுபோன்று பேசப்பட்ட ஒரு சுதந்த வாசனையைக்குறித்து விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. "அவைகளையெல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியாகத் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி" (லேவியராகமம் 1:9). ஆசரிப்பு கூடார பலிகள் மற்றும் தூபபீடத்தின் பலிகளின் அங்கிகரிப்பின் நிலையைக் குறிப்பதற்கு நம்முடைய பரலோக தந்தையுங்கூட நறுமணத்தைப் பயன்படுத்துகிறார். இதிலிருந்தும் மற்ற

வசனங்களிலிருந்தும் நம்முடைய மாம்சத்தின் நுகரும் திறன், நம்முடைய ஆவிக்குரிய பகுத்தறிதலைக் குறிப்பிடும் என்ற முடிவுக்கு வரலாம்.

**விருப்பம்**

நம்முடைய ஆவிக்குரிய விருப்பத்தின் உணர்வைக் குறிப்பிடுவதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் மாம்சத்தின் தொடுணர்வைப் பயன்படுத்துகிறார். "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" (அப்போஸ்தலர் 17:27).

**அனுபவம்**

இறுதியாக, தாவீது இராஜா நம்முடைய ஆவிக்குரிய அனுபவங்களின் உணர்வைக் குறிப்பிடுவதற்குச் சுவைக்கக்கூடிய உணர்வைப் பயன்படுத்துகிறார். "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கை யாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 34:8). இந்த வசனங்கள், நம்முடைய சுவைக்கக்கூடிய உணர்வுகளையும் பார்க்கக்கூடிய பார்வையையும் இணைத்து தேவன்மேல் நம்பிக்கைக்கொள்வதற்குத் துவக்கமான ஒரு அழைப்பாக இருப்பது, ஆர்வமூட்டக்கூடியதாக உள்ளது. வாழ்க்கையில் பல கடினமான அனுபவங்களுக்குப் பின் தேவனுடைய சர்வவல்லமையைப் புரிந்துகொள்ளவும், அறிவில் நம்பிக்கைக்கொள்வதற்கும் தாவீது கற்றுக்கொண்டார்.

**முதிர்ச்சியினால் பலப்படுதல்**

நம்முடைய சொந்த ஆவிக்குரிய உணர்வுகளைப் பலப்படுத்துவதற்கு நாமே பொறுப்பாளிகளாக இருக்கிறோம் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்படுகிறார். "ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர் களாயிருந்து; இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல்பூரண நம்பிக்கையுள்ளவர் களாயிருங்கள்" (1 பேதுரு 1:13). இந்த வசனத்தோடு ஏசாயா மற்றும் எபிரெயர் வசன பகுதிகளை இணைத்து, நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளில் நாம் வளாச்சி அடையவதில் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை நம்முடைய மனதிற்கு அறிவுருத்துகிறது. ஆவிக்குரிய புலன்கள் வலுவடைந்து விசுவாசத்தில் வளர்சி பெற விடாமுயற்சியோடு நம்முடைய ஆவிக்குரிய புலன்களைச் சரியாகப் பயிற்றுவிப்பதே, சுத்திகரிப்பதற்கான நம்முடைய பங்காகும்.

ஒருவேளை, இப்படியாக சிந்தையைக் கூர்மையாக்குவதற்கு, இயேசு அவருடைய சீஷர்களுக்குக் கொடுத்த எச்சரிப்புகளின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். "நீங்கள் இந்த வார்த்தைகளைக் கவனமாய்க் கேளுங்கள்; மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப்போகிறார் என்றார். அவர்கள் அந்த வார்த்தையின் கருத்தை அறிந்து கொள்ளவில்லை; அது அவர்களுக்குத் தோன்றாமல் மறைபொருளாயிருந்தது; அந்த வார்த்தையைக் குறித்து அவரிடத்தில் விசாரிக்கவும் பயந்தார்கள்" (லூக்கா 9:44-45). இந்த வசனங்கள் எவ்வாறாக நம்முடைய கேட்கும் திறனைப் புரிந்துகொள்ளுதலுக்கும், காணும் காட்சியை உள்ளுணர்வுகளுக்கும் பயன்படுத்துகிறது என்பதைக் கவனித்துப் பாருங்கள். இந்த உணர்வுகளின், உருவகங்களைப் புரிந்துகொள்ளுதல், நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் அனுபவங்களின் ஆழங்களை அறிந்துகொள்ள நடத்துகிறது.

**நம்முடைய வளர்ச்சிக்கான ஏற்பாடு**

நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையின் துவக்க நிலைகளிலிருந்து முடிவுவரைக்கும் விசுவாசத்தின் பாதையில், நம்முடைய அழைப்பின் தொடர் வரிசையின் ஆழமான கண்ணோட்டத்தை நம்முடைய ஐந்து ஆவிக்குரிய புலன்களும் தருகிறது.

"உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்" (மத்தேயு 13:16) என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார். முதலில் அறிவையும் (பார்வை) அதற்குப் பின் புரிந்துகொள்ளுதலையும் (கேட்டல்) பெறாமல், உண்மையான விசுவாசம் பகுத்தறியக் கூடியதாகவும் (நுகருதல்) விரும்பக்கூடியதாகவும் (தொடுணர்வு) அல்லது அனுபவமாகவும் (சுவை) வளர இயலாது. காண்பதும் கேட்டலும், நம்முடைய விசாவசத்திற்கு முதல் இரண்டு படிகளாக உள்ளது. மேலும், இங்கு இயேசு இவைகளின் முக்கியத்துவத்தை தம்முடைய சீஷர்களுக்கு வலியுறுத்துகிறார்.

நம்முடைய கிறிஸ்தவ நடையின் துவக்கத்தில் தேவனுடைய அழைப்பை நாம் உணர்ந்துகொண்டபோது, நம்முடைய ஆவிக்குரிய கண்களாகிய பகுத்துணர்வைப் பயன்படுத்தி சத்தியத்தைக் கண்டோம் என்பதை நாம்

எண்ணிக்கொள்ளலாம். இரண்டாவதாக, நாம் சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு நம்முடைய ஆவிக்குரிய செவிகளைப் பயன்படுத்தினோம். மூன்றாவதாக, ஞானம், நீதி மற்றும் நம்முடைய அன்பான சிருஷ்டிகரைக்குறித்து நாம் அறிந்துகொண்டதை, மூக்கைப் பயன்படுத்தி சத்தியம் இன்னதென்று பகுத்தறிந்தோம். நான்காவதாக, நம்முடைய ஆவிக்குரிய தொடுணர்வைப் பயன்படுத்தி சத்தியத்தை உணர்ந்துகொள்ள, நிலத்தில் புதைக்கப்பட்டு, மறைந்திருக்கும் ஒரு பொக்கிஷம்போல சத்தியத்தை விரும்பினோம். ஐந்தாவதாக சத்தியத்தில் பங்கெடுத்து, அதன் வல்லமையை அனுபவித்து அதை ருசிபார்த்தோம். அது அற்புதமான சுவையைக் கொண்டிருப்பதை நாம் கண்டுபிடித்தோம், உண்மையான விசுவாசத்தில் வளர்ச்சியடைவதற்கு ஒரு அருமையான ஒழுங்கு முறையான செயலை இந்த வரிசையில் காணலாம்.

**விசுவாசத்தின் எடுத்துக்காட்டுகள்**

இந்த விசுவாசத்தின் வரிசை, யோவான் ஆறாம் அதிகாரத்தில் பேசப்பட்ட மூன்று வகுப்பாரின் வாழ்க்கையில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டதென்று நாம் கவனிக்கலாம். அப்பம் மற்றும் மீன்களின் அற்புதம் பரிசேயர், ஜனக்கூட்டங்கள் மற்றும் சீஷர்களிடமும் வித்தியாசமான பாதிப்புகளை உண்டாக்கியது.

இயேசுதான் மேசியா என்று பரிசேயர்கள் நம்பவில்லை. நூதனபிரியத்தால் மட்டுமே அவர்கள் இயேசுவைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். பரிசேயர்கள் அந்த அற்புதத்தைப் புரிந்துகொள்ளவும் இல்லை, அவர் தான் மேசியா என்பதற்கான வார்த்தைகளின் நிரூபணங்களை உணர்ந்துகொள்ளவும் இல்லை. சத்தியத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய விசுவாசத்தின் முதல் இரண்டு படிகளை இந்த பரிசேயர்கள் கடக்கவில்லை. இயேசு தம்முடைய ஊழியத்தின்போது, இந்தப் பரிசேயர்கள் அவருடைய கிரியைகளைக் கண்டு, அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு மிகுதியான காலத்தைக் கொடுத்தார். இறுதியாக, அவர்களைக் குருடரான வழிகாட்டிகள் என்று அறிவித்தார். "குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக் கிறீர்கள்" (மத்தேயு 23:24). சுருக்கமாகச் சொல்லப்போனால், முதல் படியிலேயே இவர்கள் தவறிவிட்டார்கள் என்று இயேசு உறுதியாகக் கூறினார். இவர்கள் கண்கள் ஆவிக்குரிய விதத்தில் குருடாக இருந்ததினால், இவர்களால் சத்தியத்தை உணர முடியவில்லை.

இரண்டாவது வகுப்பார், அற்புதத்தைக் கண்ட அந்த ஜனக்கூட்டத்தார் அனைவரும் இயேசுவின் வார்த்தைகளால் அசைக்கப்பட்டார்கள். அவர்களின் கண்களினால் அந்த அற்புதத்தைக் கண்டார்கள், அவர்களின் கேட்கக்கூடிய காதுகளினால் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டார்கள். ஒருவேளை, அவர்கள் பெற்றிருந்த குறைந்த பட்ச ஆன்மீக பயிற்சியினால், இயேசுவே மேசியா என்பதைப் பகுத்தறிந்து புரிந்துகொண்டிருக்க வேண்டும். இயேசுவை இவர்கள் இராஜாவாக ஏற்படுத்து வதற்கும் இது கட்டாயப்படுத்தியது (யோவான் 6:14-15). ஆயினும், அவர்களின் புதிய விசுவாசத்திற்கான அடுத்த படியில் இயேசு அவர்களை நடத்துவதற்கு அவர்களை அழைத்தபோது, அவர்கள் இயேசுவைப் பின்பற்றவில்லை. இயேசு தன்னுடைய மாம்சத்தைப் புசித்து, இரத்தத்தைப் பானம் பண்ணும்படி சொன்னபோது, இயேசுவின் வார்த்தைகள் அவர்களுக்குச் "சரியான மனமாக" இல்லாததினால் இந்தச் சிந்தை அவர்களுக்கு முரண்பாடாகத் தோன்றியது. இரண்டு படிகளை அவர்கள் கடந்தபின் நின்றுவிட்டார்கள். அவைகளைச் சத்தியம் என்று அவர்கள் உணர்ந்துகொள்ளாததினால், அவருடைய வார்த்தைகளை அவர்கள் விரும்பவில்லை.

மூன்றாவது வகுப்பாராகிய இயேசுவின் சீஷர்கள் (அவருடைய அப்போஸ்தலர்களாகத் தகுதி பெறப்போகிற பதினோரு பேர்கள்) அவருடைய மாம்சத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென்று இயேசு சொன்ன வார்த்தைகளுக்கு எந்த எதிர்ப்புகளையும் தெரிவிக்கவில்லை. உண்மையான விசுவாசத்தைத் தங்களுக்குள் கட்டுவதற்கு அவர்களின் ஆவிக்குரிய கண்களும் காதுகளும் திறந்திருந்ததினால், விசவாசத்தின் கதவுகளைக் கடந்து வந்தார்கள். இவர்கள் உணவை உண்ண மட்டும் வராமல், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பை சரியாகப் புரிந்துகொண்டு, விரும்பி, அனுபவங்களைப் பெறும்போது அவர்களின் விசுவாசம் எவ்வாறு தொடர்ந்தது என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

அதுபோல, நம்முடைய சொந்த அழைப்பு, நம்முடைய இருதயத்தின் கதவுகளில் ஒலித்த ஒரு தட்டுதலில் துவங்கியது. "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளிப்படுத்தல் 3:20). நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளின் கண்ணாடி வில்லையின் (Lens) வழியாக வசனங்களை நாம் பார்த்து, நம்முடைய

விசுவாசத்தின் வரிசையிலுள்ள ஐந்து படிகள் நாம் மீண்டும் நினைவு படுத்தும்போது பாடம் தெளிவாகும். நம்முடைய விசுவாசத்தின் காலத்திற்குரிய வளர்ச்சி உறுதிப்படுகிறது. இந்தச் செயல்முறையின் இறுதிபடி இயேசுவோடு "புசிப்பதாகும்" (சுவைத்து, அனுபவித்தல்).

எடுத்துக்காட்டாக, இயேசு நம்முடைய இரட்சகர் என்பதை நாம் உணர்ந்துகொண்டபின் இயேசுவின் இரத்தத்தின்மேலுள்ள நம்பிக்கையினால் முதலில் சத்தியத்தைக் கற்றுக்கொண்டோம். விசுவாசத்தின் கண்களின் வழியாக, இந்த முதல் அடியை நாம் எடுத்து வைத்தோம். அதற்குப்பின் நம்முடைய கேட்கக்கூடிய காதுகளின் வழியாக சத்தியத்தைப் புரிந்துகொண்டோம். அதற்குப்பின் காலத்திற்கு ஏற்ற உணவே, இக்கால சத்தியம் என்று நாம் உணர்ந்துகொள்வதற்கான நம்முடைய மூக்கு, நாம் தேடிக்கொண்டிருந்த சத்தியம் இதுவே என்று அறிவித்தது. இந்த நேரத்தில், இயேசு தட்டிக்கொண்டிருந்த கதவை, மிகுந்த ஆசையோடும், ஆர்வத்தோடும் தொட்டுத் திறந்தோம். அதற்குப் பின் இயேசு நம்முடைய இருதயத்திற்குள் பிரவேசித்தார். நாம் அவரிடமிருந்த ஆவிக்குரிய உணவை "உண்டோம்."

**சரியான நேரத்தில் உருக்கமான அனுபவம்**

இயேசு தம்முடைய ஊழியத்தின் முடிவில், தம்முடைய சீஷர்களின் கால்களை கழுவி (தொட்டு) நினைவுகூருதலின் அடையாளங்களை ஏற்படுத்தி (சுவை), எப்படிப்பட்ட ஒரு உருக்கமான அனுபவத்தை ஏற்ற நேரத்தில் அவர்களுக்குக் கொடுத்தார் என்பதைக் கவனிக்க வேண்டும். இயேசு அவருடைய உடல் ரீதியான தொடுணர்வினால், ஒவ்வொரு சீஷர்களின்மேலும் அவர் கொண்டிருக்கும் விருப்பத்தை, கால்களைக் கழுவும் அனுபவம் எடுத்துக்காட்டியது. தொடுதலின் மூலமாக இயேசு ஒவ்வொரு சீஷரிடமும் கொண்டிருக்கும் விருப்பத்தையும், அதுபோல ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யக்கூடிய விருப்பத்தைப்பற்றியும் தெரிவித்தார். அவர் செல்வதற்குமுன் புளிப்பில்லா அப்பம் மற்றும் பாத்திரத்தையும் கொடுத்து தம்முடைய சீஷர்களுக்கு மறக்கமுடியாத முழு உணர்வுள்ள ஒரு அனுபவத்தைக் கொடுத்தார். இறுதியான ஒரு வேண்டுகோளோடு, தங்களுடைய இறுதியான இரண்டு உணர்வுகளாகிய விருப்பம் (தொடுதல்) மற்றும் அனுபவங்களோடு (சுவை) இயேசு தம்முடைய சீஷர்களைத் தங்களுடைய சொந்த ஊழியத்திற்கு ஆயத்தம் செய்தார். நம் ஆவிக்குரிய உணர்வுகளின் வழியாக வேதத்தில் மறைந்திருக்கும் அழகு வெளிப்படுவதின் மூலம் வேதம் புது அர்த்தத்துடன் உயிர் பெறுவதை பார்ப்பதற்கு எவ்வளவு அருமையாக உள்ளது.

**நன்மை மற்றும் தீமையை அறிந்து கொள்வதற்கான பயிற்சி**

நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளையும், உடல் ரீதியான உணர்வுகளுக்குமுள்ள தொடர்பை செயல் விளக்கம் அளிப்பதற்கு நம்முடைய வீட்டிலுள்ள பிரிட்ஜை சுத்தம் செய்வதற்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

பிரிட்ஜின் கதவை நாம் திறக்கும்போது, பொதுவாக அதற்குள் இருக்கும் பொருட்கள் ஏதாகிலும் கெட்டுப்போயிருந்தால் உடனடியாக நாம் சொல்லிவிடலாம். உண்மையில், நம்முடைய முகரும் உணர்வினால் உடனடியாகக் கண்டுபிடித்துவிடுகிறோம். உணவு கெட்டுப்போயிருப்பதை நிச்சயமாக நாம் அறிந்துகொள்ளாவிட்டால், நம்முடைய கண்களைப் பயன்படுத்தி அவைகளை ஆய்வு செய்ய வேண்டும் அல்லது நம்முடைய கரங்களினால் தொட்டு அல்லது மூக்கினால் முகர்ந்துப்பார்க்க வேண்டும். ஆயினும், அந்த உணவு கெட்டுப்போனதா என்று அறிந்துகொள்வதற்கு நாம் நிச்சயமாக சுவைக்கமாட்டோம். அதைப்பார்த்த உடனே அல்லது முகர்ந்தவுடனே நாம் அதை வெளியே எறிந்து விடுவோம்.

ஆவிக்குரிய உணவை நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகள் மதிப்பிடுவதற்கு இந்தச் செயல்முறை நமக்கு ஒரு மாதிரியைத் தருகிறது. முதலாவது நம்முடைய ஆவிக்குரிய உணவை, நம்முடைய ஆவிக்குரிய பார்வையில்பார்த்து, அதற்குப்பின் மூக்கினால் முகர்ந்து உணர்ந்துகொண்டு, அதற்குப் பின் அது ஆவிக்குரிய நன்மையான உணவாக இருப்பதாக நாம் ஐயப்பட்டால் நாம் அதைத் தொட்டுப்பார்க்க வேண்டும். இந்த ஒரு யோசனை பயனளிக்காவிட்டால், அதை உடனடியாக நிராகரித்துப் புறக்கணிக்க வேண்டும். கெட்டுப்போன கோட்பாடுகளை அல்லது காரியங்களை நாம் என்றுமே சுவைக்கக்கூடாது (அனுபவம்). ஏனெனில், இவைகள் நமக்கு ஆவிக்குரிய வியாதிகளை வருவிக்கும். அப்போஸ்தலராகிய யோவான் நமக்குச் சில நல்ல ஆலோசனைகளைத் தருகிறார். "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1 யோவான் 4:1). முதலில் நம்முடைய மூன்று ஆவிக்குரிய உணர்வுகளினால் இந்த உபதேசங்களை நாம் சோதித்துப்பார்க்க வேண்டும்.

ஒருவேளை யாக்கோபு நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளின் இப்படிப்பட்ட செயல்களின் வழியாக நுழையக்கூடிய பாவங்களைக்குறித்து நம்மை எச்சரித்திருந்தாரோ! "பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக்கோபு 1:15). நாம் உதவி செய்ய இயலாதபோதிலும் இந்த உலகத்தின் பாவத்தை உணர்ந்து (பார்த்து) அதைப் புரிந்துகொண்டு (கேட்டு) அறிந்துகொள்கிறோம் (நுகர்ந்து). அதற்குப் பின் அந்தப் பாவம், நாம் தொடவிரும்பும் பொருளாக இருந்தால், அதன் இறுதி நிலையான அனுபவத்தில் (சுவைக்காமல்) அதில் வழுக்கி விழாமல் தப்பிப்பது மிகக் கடினமான ஒரு காரியமாக இருக்கிறது. நம்முடைய (தொடுதல்) மற்றும் பாவத்தில் நம்முடைய அனுபவங்களின் (சுவை) இரண்டு நிலைகளைக் குறித்தே யாக்கோபு நம்மை எச்சரித்திருக்க வேண்டும். ஆதியாகமம் 6:2-ஆம் வசனத்தில் குறிக்கும் விழுந்துபோன தூதர்களின் பாவத்தை இந்தக் கடைசி இரண்டு நிலைகள் விவரிக்கிறது.

**நம்முடைய பொறுப்புகள்**

நம்முடைய ஆவிக்குரிய உயர்வை ஊக்கவிக்கவும், சுத்திகரிக்கவும், நாம் பொறுப்பெடுத்துக்கொண்டால், அவருடைய சுத்திகரிக்கும் வல்லமைக்கு நம்மைச் சரியாக ஒப்புக்கொடுத்தால், தேவன் நம்மை வழிநடத்துவார் என்று வாக்களித்திருக்கிறார். "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 14:26). உபத்திரவத்திற்குப்பின், இந்த உலகத்தை வழிநடத்துவதற்காக வாக்களிக்கப் பட்ட சுத்தமான பாஷையைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை இப்போது நாம் பெற்றிருக்கிறோம்."அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" (செப்பனியா 3:9). இப்போது இரைச்சலும், வன்முறையும் நிறைந்த உலகத்தில் வசனங்கள் மற்றும் பரிசுத்த ஆவியின் வழியாகக் கேட்கக்கூடிய மெல்லிய சத்தியத்தையும் கவனிப்பதற்கான காலமாக இருக்கிறது. "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2 பேதுரு 3:11).

இயேசுவின் எச்சரிப்புகளைப் பின்பற்றுவதற்கு விழித்திருந்து, ஜெபித்து நம்முடைய ஆவிக்குரிய உணர்வுளை நாம் போஷித்து, "நம்முடைய இருதயத்தின் கண்கள்" திறக்கப்பட்டு தேவனுடைய நடத்துதலுக்கு உணர்வோடு இருக்கும்படிக்கு இயேசு நமக்கு இந்தச் சூத்திரத்தைக் கொடுத்திருக்கிறார். சாத்தானும் நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளைத் தூண்டி விடலாம், ஆனால் நம்முடைய சுத்திகரிப்பின் வேலைகளில் நம்முடைய பங்கானது, நாம் தேவனிடத்தில் அவைகளை அர்ப்பணிக்க வேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளின் மனம் சார்ந்த திறமைகளை விவரிப்பதற்கு உருவகமாகப் பயன்படுத்தப்படும், ஒவ்வொரு உடல் ரீதியான உணர்வுகளை வசனங்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்று இந்த ஹெரால்டு பிரதியில் அடுத்து வரும் ஐந்து காட்டுரைகள் தெளிவாகக் காட்டுகிறது. ஒவ்வொரு உடல் ரீதியான புலன்களுக்குப்பின் இருக்கும் ஆவிக்குரிய உணர்வுகளைப்பற்றி நாம் புரிந்துகொண்டால், வசனங்கள் ஜீவனோடும், ஆழமான அர்த்தத்தோடும் வெளிவரும். அப்போஸ்தலனாகிய பவுல் மற்றும் அப்போஸ்தலனாகிய பேதுரு இருவருமே நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகளைப்பற்றி அறிவுறுத்து கிறார்கள். இப்போது மிகவும் முக்கியமாக, நம்மை வளர்ச்சியடையச் செய்வதற்கான அவர்கள் அளிக்கக்கூடிய ஊக்கம், நம்முடைய இருதயத்தில் பதிந்திருக்கிறது.

உணரத்துவங்குவது

# பார்வை



Jonathan Gray

"அவன் ஏறிட்டுப் பார்த்து: நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான்" (மாற்கு 8:24).

நான் 1970-ஆம் வருடத்தில் வளர்ந்து கொண்டிருந்தபோது, என்னுடைய பெற்றோரின் பெரிய பதிவு திரட்டுகளில் (LP Record Album) விசேஷமாக "The Gospel Road Soundtrack" என்ற பதிவைக் கேட்பதற்கு நான் விரும்பினேன். அந்நேரத்தில், ஜானி காஷ் (Johnny Cash) என்ற பெயர் எனக்கு எதையும் பொருள்படுத்தாமல் போனாலும், கிறிஸ்து அந்தக் குருடருக்குப் பார்வையளித்த அந்த நிகழ்வு எனது உணர்வுகளில், "நான் நடக்கிற மனுஷரை மரங்களைப்போல காண்கிறேன்" என்ற பாடல் ஆழமான விளைவை உண்டுபண்ணியது.

### பிறவிக்குருடனை சொஸ்தமாக்குதல்

இந்த அனுபவம் ஒருவேளை படிப்படியாக நடந்திருக்க வேண்டும். பட்டணத்து வீதியில், தூசியடைந்த அமைதியான ஒரு பழைய சுவற்றின் ஓரத்தில், ஒரு மனுஷன் கீழ்ப்படிகளில் அமர்ந்தவாறு, தன்னுடைய முகத்தை, படிகளின்மேல் வைத்திருந்த கரங்களை நோக்கிக்கொண்டிருந்தான். கூட்டம் வந்தபோது, அவர்களைக் காணும்படி அவன் தலையை உயர்த்தினான். ஆனால் அவன் கண்களினால் எதையும் காணமுடியவில்லை. அவனுடைய கண்கள் யாரையும் காணவும் இல்லை. அவன் இருண்ட பக்கங்களைத் திரும்பத் திரும்பப் பார்த்தாலும் அவனால் எதையும் பார்க்கமுடியவில்லை. அந்த மனுஷன் பிறவி குருடனாயிருந்தான்.

அந்தக் கூட்டத்தில் வந்திருந்த ஒரு மனுஷன், "அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" (யோவான் 9:2-3).

இதைக் கேட்ட அந்தக் குருடன் பேசப்படும் அந்த வார்த்தைகளை நேரடியாகக் கேட்கும்படிக்கு பேசக்கூடிய அந்த மனுஷனிடமாக எழும்பினான். பேசிக்கொண்டிருந்த மனுஷன் தொடர்ந்து பேசினார். "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது." படிகளில் அமர்ந்திருந்த குருடனுக்கு அருகில் அவர் குனிந்து, "நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவான் 9:2-11) என்று அந்தப் பேச்சாளர் பேசினார்.

ஏதோ ஒன்று நடக்கப்போகிறது என்று அந்தக் குருடன் உணர்ந்து, எதிர்பார்ப்புகளோடு, ஆழமாக பெருமூச்சுவிடத் துவங்கினான். அதற்குப்பின் எதிர்பாராத ஒன்று நடந்தது. குனிந்த அந்த மனுஷன் தன்னுடைய வாயிலிருந்து உமிழ்நீரினால் தம்முடைய விரல்களை நனைத்து, தரையிலுள்ள மண்ணை எடுத்து அதினால் சேறுண்டாக்கினார்.

அந்த மனுஷன் தன்னுடைய கைகளைக் குருடனுடைய முகத்திற்குக்கொண்டுச் செல்கையில், இருவரையும் சுற்றி சூழ்ந்திருந்த அனைவரிடமும் முறுமுறுப்புகளும், பல பேச்சுக் குரல்களும் எழும்பியது . குருடனுடைய கண்களின்மேல் அந்த மனுஷன் தம்முடைய விரல்களிலுள்ள சேற்றைப் பூசி, "நீ போய், சீலோவாம் குளத்தில் கழுவு" என்று எளிமையாகக் கூறினார்.

### தேவனுடைய பாதுகாப்பு

இந்த அற்புதம் நடந்த பல நூற்றாண்டுகளுக்கு முன் பண்டைய காலத்தில் டோத்தான் (Dothan)என்ற பட்டணத்தில் வசித்து வந்த ஒரு தீர்க்கதரிசியும் அவருடைய வேலைக்காரனும் ஒரு நாள் காலை எழுந்திருந்தபோது, தங்களைச் சுற்றி எதிரிகளின் படை சூழ்ந்திருக்கக் கண்டார்கள் (2 இராஜாக்கள் 6). அந்தத் தீர்க்கதரிசியைப் பிடித்து வரும்படி எதிரி நாட்டு இராஜாக்களில் ஒருவன் தன்னுடைய படையை அனுப்பினான். அவனுடைய படைக்கு இனி சம்பவிக்கக்கூடிய காரியங்களை முன் அறிவிக்கக்கூடிய அந்தத் தீர்க்கதரிசியைத் தடுத்து அவர்களின் போர் யுக்திகளைக் குலைத்து

இஸ்ரயேலுக்கு எதிராகப் பதுங்கி, எதிர்பாராத நேரத்தில் அவர்களைத் தாக்க வேண்டுமென்று எண்ணினான்.

எதிரியின் கணக்கில்லாத இரதங்கள், கேடயங்கள், ஈட்டிகள் மற்றும் சேனையைப் பார்த்தவுடனே, தீர்க்கதரிசியின் ஊழியக்காரன் பயந்தான். அந்தச் சேனை, தன்னுடைய எஜமானனைச் சிறைபிடித்துப் போவார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். "நாம் என்ன செய்வது" என்ற பயத்துடன் கேட்டான். "பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" (2 இராஜாக்கள் 6:8-23) என்று அந்த ஊழியக்காரனிடம் நம்பிக்கையோடு உறுதியளித்தார்.

குழப்பமடைந்த ஊழியக்காரன், "ஐயோ, என் ஆண்டவனே, என்னசெய்வோம் என்று குரலெழுப்பினான். அப்பொழுது எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். அவர்கள் அவனிடத்தில் வருகையில் எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: இந்த ஜனங்களுக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்றான்; எலிசாவுடைய வார்த்தையின்படியே அவர்களுக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி செய்தார்." "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங்கீதம் 34: 7).

### அனைவரும் ஆவிக்குரிய பிறவிக் குருடர்கள்

தன்னையும், தன்னுடைய எஜமானனையும் பாதுகாத்த அந்த ஆவிக்குரிய வல்லமைகளை அந்த ஊழியக்காரன் அறியாதிருந்ததுபோல, நம்மைச் சுற்றி வியாபித்திருக்கும் ஆவிக்குரிய உலகத்தையும், ஆவிக்குரிய சத்தியத்தையும் நாம் அறியாமல் இருக்கிறோம். ஒருவகையில் நாம் பார்க்கும்போது, நம்முடைய ஆவிக்குரிய பிறப்புக்கு முன் நாம் குருடாராயிருந்தோம். அதுபோல, மனுக்குலத்தின் சார்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆவிக்குரிய சத்தியம் மற்றும் ஆவிக்குரிய வல்லமைகளைப்பற்றி இந்த மனுக்குலம் அறியாமல் இருக்கிறது.

"சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்" (மத்தேயு 13:10) என்று இயேசுவின் சீஷர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், "அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களையும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள்" (மத்தேயு 13:13, 14) என்று பதில் அளித்தார்.

இயேசுவின் உவமைகள் கற்றுக்கொடுத்த ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ளும் திறனை, ஆவிக்குரிய பார்வையோடு இயேசு சமமாக்கினார். அங்கிருந்த ஜனக்கூட்டத்தில் பலருக்கு, ஆவிக்குரிய சத்தியங்கள் பேசப்படுவதை, அறியாமலிருந்தார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், அங்குச் சொல்லப்பட்ட உவமைகள் அருமையான கதைகளாக இருந்தது - கேட்பதற்கான கட்டுக்கதை, ஒரு பொழுதுபோக்கு - ஆவிக்குரிய சத்தியங்கள் பேசப்பட்டதை அறியாதிருந்தார்கள். உண்மையில் இந்நாள் வரைக்கும் இவைகள் காணப்படுகிறது.

### குருட்டுத்தன்மை இருதய நிலையைக் குறிப்பிடுகிறது

"இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள்" (மத்தேயு 13:15).

அவர்களுடைய மனக் கண்கள் குருடாயிருப்பதைக்குறித்து இயேசு கூறினார். அவர்களிடம் பேசப்பட்ட ஆவிக்குரிய சத்தியங்களை அவர்களால் காணமுடியவில்லை. அவருடைய உவமைகளில், பொதுவானவர்களுக்கும் சீஷர்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை ஏற்படுத்தினார். அவர் "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ள

வைகள்" (மத்தேயு 13:16) என்று கூறினார். அந்த உவமைகளிலுள்ள சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கு இயேசுவின் உதவி தேவை என்பதை சீஷர்கள் உணர்ந்திருந்தபோதும், அந்த உவமைகளில் ஆவிக்குரிய சத்தியம் நிறைந்திருப்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இப்படிப்பட்ட உவமைகளுக்கும் மற்றவர்களால் சொல்லப்படும் கட்டுக்கதைகளுக்குமுள்ள வேறுபாடுகளை சீஷர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

இயேசுவின் சீஷர்களின் ஆவிக்குரிய உணர்வுகளை எழுப்பி, கேட்டுப் புரிந்து கொள்ளக்கூடிய அடுத்தப் படியில் நடத்துவதற்கு அவர்களில் திறக்கப்பட்ட கண்கள் உதவிசெய்தது.

**இந்தப் பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்டவர்கள்**

இந்த உலகத்திலிருக்கும் பொதுவான ஆவிக்குரிய குருட்டுத்தனத்தைக்குறித்து அப்போஸ்தலர் பவுல் விவரிக்கிறார். "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4).

வருங்காலத்தில், "குருடரின் கண்கள் திறக்கப்படும்" என்று வசனங்களில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும் வரையில், அவிசுவாசிகளின் கண்கள் மூடப்பட்டிருக்கும். அதற்குப் பின் ஜீவனுக்குப் போகிற நெருக்கமான வழிக்குப் பதிலாக, பரிசுத்தமான பெரும்பாதை திறக்கப்படும் - அதில் சிங்கம் இருப்பதில்லை – அதாவது, இன்று ஜாதிகளை வஞ்சிக்கும் சக்தி வாய்ந்தவன் போன்ற ஒருவன் இருப்பதில்லை (ஏசாயா 35 :5, 9; 1பேதுரு 5:8).

முற்காலத்தில் நாம் அந்தப் "பிறவிக் குருடனைப்" போலிருந்தோம். சுவிசேஷ யுகத்தில், தேவன் அவருடைய ஜனங்களுக்காகச் சேர்த்து வைத்திருக்கும் ஆவிக்குரிய காரியங்களுக்குக் குருடராக இருந்தோம். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் குணமடைந்து பரிசுத்தமான பெரும்பாதையில் நடப்பதற்கு ஆவிக்குரிய கண்கள் கொடுக்கப்படும் வரையில், இந்த உலகத்தின் மனுக்குலம் குருடாயிருக்கும்.

பிறவிக் குருடன் அவனுக்கு முன் குனிந்த மனஷனுடைய சத்தத்தைக் கேட்பதற்கு முடிவு செய்தான். அவனுடைய கண்களில் சேற்றைப் பூசினவர், சீலோவாம் குளத்தில் கண்களைக் கழுவும்படிக் கூறினார். பார்வையற்ற அந்த மனுஷன் எழுந்து வீதியின் ஓரமாக நடந்து, சாலையின் இரு பக்கங்களிலிருக்கும் சுவர்களிலுள்ள பழக்கப்பட்ட விரிசல்களைத் தன்னுடைய கைகளினால் தடவி தேடிக்கொண்டே நடந்து போனான். ஒரு மூலைக்கு அவன் வந்தபோது, அந்தக் குளம் இடது பக்கத்தில் இருப்பதை நினைவுகூர்ந்தபோது, அவன் எச்சரிப்போடு தொடர்ந்தான். ஏதோ ஒரு அற்புதம் நடக்கப்போகிறதென்று தன்னுடைய இருதயத்தில் எதிர்பார்ப்புகளோடு அவன் பொறுமையாக நடந்தாலும், தன்னுடைய நடையை உறுதிப்படுத்திக்கொண்டான்.

ஆவிக்குரிய பார்வையைப் பெறுவதற்கு சற்று முன் நமக்கு சத்தியம் காணப்பட்டபோது, நமக்குமுன் வைக்கப்படும் சில முக்கியமான காரியங்களை முதலில் மனதார உணருவதற்கு, நாம் வேலை செய்ய வேண்டும் என்பதை நாம் முதலில் உணர வேண்டும். அந்தக் குளத்தை இருட்டில் தட்டுத்தடுமாறி தேடுவது போலிருக்கும். நாம் இருளான சாலையின் சுவரைத் தடவி நடப்பதுபோல உணரலாம். பிறவிக் குருடன் தான் உண்மையில் பார்வை அடைவதற்குமுன், அவர் காணக்கூடியவைகள் எப்படியிருக்கும் என்பதை அவர் கண்டிருக்க வேண்டும். ஆனால் அவன் உண்மையில் காண்பதற்கு, சீலோவாம் குளத்தில் கழுவுவதற்கு அனுப்பினவருடைய கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான்.

தீர்க்கதரிசியாகிய எலிசாவோடு, அந்த ஊழியக்காரன் தோத்தானில் நிற்கும்போது, திடீரென்று தேவனுடைய சேனைகள் சுற்றிப் பாளயம் இறங்கியதைக் கண்டதுபோல நாம் நம்முடைய ஆவிக்குரிய பார்வையைப் பெறும்போது உடனடியாக அனைத்தும் வெளிப்படுவதில்லை.

**அப்போஸ்தலனாகிய பவுல் திடீரென்று பெற்ற அற்புதமான பார்வைத் திறன்**

உண்மையில், புதிதாய்ப் பெற்ற புலனுணர்வு, தமஸ்குவுக்குப் போகும் வழியில் தர்சு பட்டணத்தானாகிய சவுல் பார்த்த அந்த மின்வெட்டொளி போல துரிதமாக எப்போதும் இருந்ததில்லை. பரலோகத்திலிருந்து வந்த ஒளியின்

பிரகாசத்தில் உயிர்த்தெழுந்த ஆண்டவரை தர்சு பட்டணத்து சவுல் கண்டபோது, அவருடைய கண்கள் மூன்று நாட்களுக்கு தற்காலிகமாகக் குருடாக்கப்பட்டிருந்தது, அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார்."

"அதற்குப் பவுல், "ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்" (அப்போஸ்தலர் 9:3-6 )

ஆனால் பவுலின் இயல்பான கண்கள் தற்காலிகமாகக் குருடாக்கப்பட்டபோது, (முழுமையான பார்வை இறுதிவரையில் பெறவில்லை) அவருடைய ஆவிக்குரிய பார்வை மிக விரிவாக திறக்கப்பட்டு, ஈடு இணையற்ற ஆவிக்குரிய சத்தியங்களுக்கு வழிநடத்தியது (கலாத்தியர் 6:11; 2 கொரிந்தியர் 12:7-10).

"அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார். அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதில்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான்" (அப்போஸ்தலர் 9:16-18) என்று அப்போஸ்தலனாகிய பவுல் அந்த முழு அனுபவங்களை மறுபடியும் நினைவுகூர்ந்தார்.

**சீலோவாம் குளத்தண்டையில் குணப்படுதல்**

சீலோவாம் குளத்திற்குப் போக வேண்டுமென்ற வேகத்தில், அந்தப் பிறவிக் குருடன், தான் தொட்டுப் பழகக்கப்பட்ட அந்தப் படிகளையும், அறியப்பட்ட அந்தச் சத்தத்தைக்கொண்டும் அவன் துரிதமாக அந்தக் குளத்தண்டைக்குச் சென்றான். வீதியைத் தாண்டி வரும்போது குளிர்ந்தக் காற்று வீசியதை அவன் உணரும்போது, அந்தக் குளத்திற்கு அருகில் இருப்பதை அவன் அறிந்திருக்க வேண்டும். அவனுடைய பாதங்கள் தண்ணீரைத் தொடும்போது அதற்குள்ளிருக்கும் படிகளிலுள்ள தண்ணீரில் அவன் கால்கள் தொடுவதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். இடுப்பளவு தண்ணீருக்குள் அவன் இறங்கும் வரையில் அவன் மெதுவாக படிகளில் இறங்கியிருக்க வேண்டும்.

அவனைச் சுற்றி கிசுகிசுப்புகளையும், வெவ்வேறு குரல்களையும் அவனால் கேட்க முடிந்தது. அடுத்து அவன் என்ன செய்யப்போகிறான் என்பதைக் காணும்படிக்கு பல கண்கள் அவன்மேல் நோக்கமாயிருப்பதை அவன் உணர்ந்தான். பிறவிக் குருடனாகிய அந்த மனுஷன் தன்னுடைய இரண்டு கைகளினால் தண்ணீரை அள்ளி முகத்தில் தெளித்து, தன்னிடமாகக் குனிந்த மனுஷன் அவனுடைய கண்களின்மேல் பூசின அந்தச் சேற்றைக் கழுவினான். மீண்டுமாக, அவன் தண்ணீரை அள்ளி, கண்களைக் கழுவினான். அப்போது பிறவியில் கருமையாக இருந்த நிலை மாறத்துவங்கியது.

விவரிக்கப்பட்டபடி, பெத்சாயிதாவில் ஒரு குருடன் குணப்பட்டபோது நடந்தது போல, "நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான்" (மாற்கு 8:24). பிறவி முதல் குருடனாக இருந்த அந்த மனுஷன் கண்ட முதல் உருவங்களை நாம் கற்பனை செய்யலாம்.

**பார்வைக்கும் மற்றும் சிந்தைக்கும் உள்ள தொடர்பு**

பார்வையற்ற ஜனங்கள், அறுவை சிகிக்சையினால், திடீரென்று பார்வைப் பெற்றால், அவர்களின் (cerebral cortex) மூளையிலுள்ள காணக்கூடியப் பகுதி எவ்வாறு காண வேண்டும் என்பதை மறுபடியும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை விஞ்ஞானம் தீர்மானமாக அறிவித்துள்ளது. இயல்பாக காண்பதற்காக மூளையின் வளர்ச்சி பிறவியிலிருந்து இரண்டு வருடத்திலிருந்து துவங்கும். இந்த இரண்டு வருடங்களுக்குள் கண்கள் காணக்கூடியவைகளை மூளை கற்றுக்கொள்ளும். கற்றுக்கொள்ளக்கூடிய இந்தச் செயலுக்கு காலம் செல்லும். ஒரு மனுஷன் நீண்ட காலமாக குருடனாயிருந்து, அதற்குப்பின் பார்வை அடைந்தால், அவன் பார்க்கக்கூடியவைகளை மூளையினால் சரியாக விளக்கம் அளிக்கமுடியாது.

நரம்பியல் நிபுணர், ஆலிவர் சாக்ஸ் (Oliver Sacks) என்ற பேராசிரியர், மற்றும் பிரபலமான எழுத்தாளர் , 45 வருடங்களாகக் குருடராக இருந்த வெர்ஜில் (Virgil) தன்னுடைய கண்களிலிருக்கும் படலத்தை அறுவை சிகிச்சை செய்து, பார்வையடைந்தபோது, நடந்த காரியங்களைக்குறித்து (Awakenings and The Man Who Mistook His Wife for a Hat) என்ற புத்தகத்தில் எழுதினார்.

வெர்ஜில் பார்வைப் பெற்றவுடன் நடந்த சம்பவங்களை சாக்ஸ் (Sacks) என்பவர் (Anthropologist on Mars) என்ற அவருடைய புத்தகத்தில் விவரித்தர். "அவர் கண்டார், ஆனால் அவர் கண்ட காட்சிகளுக்கு எந்த இசைவும் இல்லாதிருந்தது." அவருடைய ரெட்டினா (retina) மற்றும் ஆப்டிக் (optic) நரம்புகள் தூண்டுதல்களை அனுப்பி செயலாற்றிக்கொண்டிருந்தாலும், அவருடைய மூளை அதை உணரமுடியவில்லை. அதாவது எந்தத் தூண்டுதல்களுக்கும் பொருள் காண இயலாதவராக இருக்கிறான் என்று அந்த நரம்பியல் சான்றளித்தார்.

"வெர்ஜிலுடைய நடவடிக்கை பார்வையுள்ள ஒரு மனுஷனைப்போலவும் இருக்கவில்லை, பார்வையற்றவனைப்போலவும் இருக்கவில்லை. இன்னும் சரியாகச் சொல்லப்போனால், இவனுடைய மனநிலை, மனதில் குருடானவன் போலிருந்தது. - அவனால் பாக்கமுடிந்தது, ஆனால் பார்த்ததைப் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று மேற்கொண்டு சாக்ஸ் எழுதினார். பார்வையடைந்தப்பின் முதல் முறையாக ஒரு மளிகைக் கடைக்கு வெர்ஜீல் சென்று அங்குள்ள அறைகள், பழங்கள், பொருட்கள், ஜனங்கள் வண்டிகள் மற்றும் கோவில்களைப்பார்த்து பயந்தார். "அனைத்தும் ஒருமித்து ஓடிக்கொண்டிருப்பதாகக்" கூறினார்.

புதிதாய்க் கிடைத்த கண்பார்வையில், முதன் முதலில் வெர்ஜில் தன் வீட்டைச் சுற்றிப்பார்கையில், ஒரு குழந்தை தன்னுடைய கண்களுக்கு முன் தன்னுடைய கைகளையும் தலையையும் மேலும், கீழும் அசைத்துக்கொண்டிருப்பதைப்போல, வெர்ஜிலின் செயல் காணப்பட்டதென்று சாக்ஸ் கூறினார். அதற்குப்பின், "வெர்ஜில் ஒரு மரத்தை ஒன்று சேர்த்தார் " - அடி மரம், இலைகள், ஒரு முழு தொகுப்பின் உருவாக்கம் என்பதை அவர் அறிந்திருந்தார் என்று அவருடைய மனைவி கூறினார். முதலில் வெர்ஜில் மனதில் உணர்ந்து. பொருட்களைக் கண்டார். ஆனால் அவர் கண்டதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பார்வையற்ற மனிதர்களை இயேசு குணமாக்கினபோது, முதலில் பார்த்தாலும், அவர்கள் மனதார குருடர்களாகவே இருந்தார்கள். உருவங்களையும், வண்ணங்களையும் அசையும் பொருட்களைப்பார்த்தாலும் அவைகளை அவரால் புரிந்துகொள்ள இயலவில்லை. மரங்களும் மனுஷர்களும் ஒரே பொருள்போல தோன்றியது. ஒரு பிறவிக் குருடன் புதிதாகக் குணப்பட்ட பின்னும் அனைத்தையும் ஒரு உருவமாக தன்னுடைய தலையில் இணைத்துப்பார்க்க முடியவில்லை, கூடுதலாக அவருக்கு ஆழமான எந்த உணர்வும் இல்லை.

அவ்வாறு நாம் நம்முடைய ஆவிக்குரிய பார்வையைப் பெறும்போது நாம் மனதால் உணர்ந்தாலும் நம்மால் புரிந்து கொள்ளமுடியாது. மாற்கு 8:22-ஆம் வசனத்தில் இயேசு பார்வையற்ற மனுஷனைக் குணமாக்கிய சம்பவம், ஆவிக்குரிய பார்வை மற்றும் மனதால், உணருவதும், மெதுவாக வளர்ச்சியடைவதை எடுத்துக்காட்டுகிறது.

முதலில் நாம் சத்தியத்தின் உருவங் களையும், நிறங்களையும் வடிவங்களையும் காண்கிறோம். ஆவிக்குரிய உண்மைகள் உண்டு என்பதை நாம் அறிந்திருக்கிறோம், ஆயினும், அவைகளின் அர்த்தங்களை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை.

**பார்வை, மனதால் உணருவதற்குச் சமம்**

அப்போஸ்தலனாகிய பவுல், பார்வையையும், மனதால் உணருவதையும் மிக அழகாக இணைத்துக் காண்பிக்கிறார். "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்" (1 கொரிந்தியர் 13:12).

பார்வைப் பெற்ற மனுஷனை பரிசேயரின் ஒரு குழு உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்று கேள்வி கேட்டபோது, "அவர் ஒரு தீர்க்கதரிசி" என்று குணமாக்கப்பட்ட அந்த மனுஷன் பதிலளித்தார் (யோவான் 9:17).

குணம்பெற்ற மனுஷனுடைய பெற்றோர்களை அந்தக் கூட்டம் விசாரித்தப்பின், அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை மீண்டும் அழைத்து: "நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்ற கூறினார்கள். அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: "உனக்கு என்னசெய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான்" என்றார்கள். அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான்" (யோவான் 9:24-27).

"அப்பொழுது அவர்கள் அவனை வைது: நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர். மோசேயுடனே தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம் என்றார்கள்" (யோவான் 9:28-29).

"அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம். பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார். பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே" (யோவான் 9:30-33) என்று மனுஷன் பதில் அளித்தார்.

"அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்" (யோவான் 9:34).

**மனிதரின் பாரம்பரிய குருட்டுத்தனம்**

மனுஷருடைய கருத்துக்களிலும், பாரம்பரியங்களிலும் ஆழமாக மூழ்கியிருந்த அந்தப் பரிசேயர்களைப்போல நாம் என்றும் மாறாதபடிக்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆவிக்குரிய சத்தியங்களை மனதார உணர்ந்துகொள்வதற்கு நம்முடைய ஆவிக்குரிய பார்வையைத் திறந்து வைத்திருக்க வேண்டும். ஒரு ஆவிக்குரிய உணர்வை மனதார உணரும்போது உண்மை எது என்று புரிந்துகொண்டு அறிவதற்கு, நம்முடைய மற்ற ஆவிக்குரிய புலன்களாகிய கேட்டல், நுகருதல், தொடுதல் மற்றும் சுவைத்தல் ஆகியவற்றைத் திறந்து வைத்திருக்க வேண்டும்.

பரிசேயரின் கூட்டதாரால் வெளியே வீசப்பட்ட, சொஸ்தமாக்கப்பட்ட அந்தக் குருடனை, இயேசு சந்தித்தார், அவரே அவனைக் குணிந்து குணப்படுத்தினவர். "அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா" (யோவான் 9:35) என்று இயேசு அந்த மனுஷனிடம் கேட்டார்.

"நான் விசுவாசிக்கிறேன்" என்று அவன் சொல்லி, இயேசுவை தொழுது கொண்டான். "அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" (யோவான் 9:38-39) என்று கூறினார்.

அவரோடிருந்த பரிசேயர் சிலர் இயேசு சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், "நாங்களும் குருடர்களா?" என்ற கேட்டனர். அதற்கு, "இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலை நிற்கிறது" என்று அவர்களுக்குப் பதிலளித்தார் (யோவான் 9:41).

**நம்முடைய ஆவிக்குரிய பார்வை**

தெளிவான ஆவிக்குரிய பார்வையைப் பெறுவதற்கான முக்கியத்துவத்தைக் குறித்து நாம் எச்சரிப்பாக இருக்க வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய கண்களினால் உணர்ந்துகொண்ட, நம்மைச் சுற்றியுள்ள ஆவிக்குரிய சத்தியங்களை அடுத்ததாக கேட்பதன் வழியாகப் புரிந்துகொள்வதற்கு நம்முடைய காணக்கூடிய புலன் உதவி செய்யம்.

"அது உண்மையானால் இன்னும் சொல்வதற்கு ஒரு காரியம் உண்டு, "இப்போது இயேசு குனிந்து என்னைத் தொட்டார், நான் அவரைக் காண விரும்புகிறேன்" என்று ஜானி காஷ் அந்தப் பாடலின் முடிவில் கூறினார்.



Regis Liberda

# செவிகொடுத்தல்

"என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா? தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்களும் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள்" (யோவான் 8:43, 47).

பரிசேயர்களின் கேட்கக்கூடிய திறனைப் புரிந்துகொள்ளுதலின் குறைவுக்கு உருவகமாகப் பயன்படுத்தி, இயேசு இந்தக் கடுமையான கண்டனத்தை அறிவித்தார். அவர்கள் தேவனோடு இசைவாக இராததினால், இயேசுவின் வார்த்தைகளுக்கு அவர்கள் ஆவிக்குரிய விதத்தில் செவிடர்களாக இருந்தனர்.

இயேசு இந்த உருவகத்தை அவருடைய ஊழியத்தின் துவக்கத்தில் பயன்படுத்தினார். மலை பிரசங்கத்தின்போது, அவரைப் புரிந்துகொள்வதற்கு அவரைக் கூர்ந்து கவனிக்கும்படி அங்கு வந்திருந்த திரளான ஜனங்களை ஊக்குவித்தார். "பின்பு அவர் ஜனங்களெல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்கள்" என்றார் (மாற்கு 7:14).

"இந்த மெல்கிசெதேக்கைப்பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம்; நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்" (எபிரெயர் 5:11) என்று அப்போஸ்தலனாகிய பவுல், எபிரெயர்களிடம் நேரடியாகக் கூறினார். கொரிந்து சபைக்கு அவர் சொன்ன மிகச் சிறந்த வாக்கியம் உண்மையில் ஒரு எச்சரிப்பாக இருந்தது - அதாவது, அவர்களின் சொந்த வார்த்தைகளாக இருந்தாலும், அன்பினால் பேசப்பட்டால் மட்டுமே அவர்களால் புரிந்துகொள்ள முடியும். "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்" (1 கொரிந்தியர் 13:1).

நம்முடைய மாம்சத்தின் கேட்கும் திறன், மாம்சத்தின் பார்க்கும் திறனைப்போலவே, அற்புதமானதும், சிக்கலான ஒரு மண்டலமாக உள்ளது. உருவகங்களின் வழியாக நம்முடைய மாம்சமான கேட்கும் திறனை ஆவிக்குரிய உணர்வாகிய புரிந்துகொள்ளுதலோடு வசனங்கள் இணைத்து காட்டுகிறது. நம்முடைய மாம்சத்தின் கேட்கும் திறனிடமிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கு அநேக அற்புதமான பாடங்கள் உண்டு. குறிப்பாக இது உண்மையானது என்பதை நான் அறிவேன். ஏனெனில் நான் பிறக்கும்போதே எனக்கு ஒரு காது செவிடாயிருந்தது.

### ஓசைகளும் அதிர்வுகளாகும்

நாம் கேட்கக்கூடிய ஓசைகள், உண்மையில் காற்று மற்றும் தண்ணீரின் வழியாக வரும் அதிர்வுகளே. இந்த ஒலி அதிர்வுகள் நம்முடைய வெளிபுறமான காதுகளுக்கு வந்து சேர்ந்த பின் அவைகள் தொடர்ந்து நம்முடைய செவி குழாயின் வழியாக, (ear canal) செவி ஜவ்வை (ear drum or tympanic membrane) வந்து சேரும். அந்த காது ஜவ்விடம் வந்த அதிர்வொலியைச் செவி சுருள்வளையத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் (cochlea) மூன்று சிறிய எலும்புகளிடம் அனுப்பும். இந்தச் செவி சுருள்வளையம் நரம்போடு இணைக்கப்பட்டுள்ளது. இந்த நரம்புகள் ஒலியதிர்வுகளைத் தூண்டுவிசையாக (impulses) மாற்றிவிடும். அதற்குப்பின் கோக்கிலியா நரம்பு (cochlea) அந்தத் தூண்டு விசையை (impulses) நம்முடைய மூளைக்கு அனுப்பிவிடும். செவியிலுள்ள ஜவ்வு, வெளியில் உள்ள சுற்றுப்புறம் செவியின் நடுப்பகுதி மற்றும் உள் பகுதிக்கும் ஒரு பிரிவை ஏற்படுத்துகிறது. மேலும் இது உட்புற செவியையும் அதன் மென்மையான செயல்முறையையும் தொற்று நோயிலிருந்து பாதுகாக்கும்.

ஒலியதிர்வுகள் காற்று அல்லது தண்ணீரின் வழியாகச் சென்றாலும் செவியின் சுருள்வளையம், அதன் அழுத்தத்திற்குத் தன்னைப் பொருத்திக்கொள்கிறது. இந்தக் காரியத்தை நம்முடைய காதுகளிலிருக்கும் யுஸ்டேஷியன் (eustachian) குழாய் நிறைவு செய்யும். அதற்குப் பின் நம்முடைய மூளை தன்னிடம் வந்த தூண்விசையை (impulse) மொழிபெயர்த்து, நம்முடைய மூளை புரிந்துகொள்ளும் வகையில் அவைகளை மாற்றும். இப்படியாக அந்த ஒலியை நம்முடைய மூளை புரிந்துகொள்ளும்போது, கேட்கக்கூடிய வழிமுறை (செயற்பாடு, நடைமுறை) முழுமைபெறுகிறது - வேதாகம கருத்துக்களை உருவகப்படுத்தி நோக்குகையில், மேலே கூறப்பட்ட முறைமைகள் ஒரு பொருத்தமான முடிவாகத் திகழ்கிறது.

**தேவனுடைய வியக்கதக்க திட்டமைப்பு**

தேவன் நம்முடைய சுற்றுபுறத்தின் அழகான ஒலிகளைப் புரிந்துகொள்வதற்கு, கூர்மதியுள்ள சிக்கலான அமைப்பை சிருஷ்டித்திருக்கிறார். இயல்பாக, கேட்கக்கூடிய திறனை அதிர்ஷ்டவசமாக நாம் பெற்றிருந்தால் மனித குரல், இன்னிசைப்பாடல்கள் மற்றும் பல அழகான இயற்கையின் சத்தங்களை இரசிப்பதற்கு ஒரு நுழைவாயாக இருக்கும்.

மற்றவர்களோடு நாம் தொடர்புகொள்வதற்கு, மனித குரலின் ஓசையே அடிப்படையானது. நாம் கேட்கக்கூடிய முதல் ஓசை நம்முடைய தாயின் வயிற்றில் இருக்கும்போது, நம்முடைய பெற்றோரின் குரலாகும். கருப்பையில் நம்முடைய மூளை வளர்ச்சியடைந்துக் கொண்டிருக்கும்போதே, நம்முடைய மூளை, நம்முடைய தாய் மற்றும் தகப்பனுடைய தனித்துவமான குரலைப் பதிவு செய்கிறது.

பிறப்பிற்குப் பின், ஒரு குழந்தை தன்னுடைய பெற்றோரின் குரலைக் கேட்கும்போது கருவில் இருக்கையில் பெற்ற பாதுகாப்பை அவர்களின் குரலோடு தொடர்புபடுத்திக்கொள்கிறது. கருவில் கேட்ட பெற்றோரின் குரல்களை அன்பும், பராமரிப்பின் உணர்வோடு தொடர்பு படுத்திக்கொள்கிறது. ஒரு குழந்தை, தன்னுடைய பெற்றோரின் வார்த்தைகளைப் புரிந்து கொள்வதற்கு முன், அவர்களின் குரலை அடையாளம் கண்டுகொண்டு, அதை நேசிக்கக் கற்றுக்கொள்கிறது. மனுக்குலத்திற்காக தேவனுடைய திட்டங்கள் மற்றும் தேவனையும் புரிந்துகொள்ள முடியாதபோதிலும் இயற்கையின் வழியாக தேவனுடைய சத்தத்தை மனுக்குலம் கேட்பதற்கு எவ்வாறு சாத்தியம் என்பதை மேற்கூறப்பட்ட காரியம் அழகாக சித்தரிக்கிறது.

"என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்" (நீதிமொழிகள் 4:20) என்ற சாலொமோன் கூறும்போது, தேவனுடைய குரலோடு நாம் கொண்டுள்ள ஆழமான தொடர்பின் தனித்துவமான கண்ணோட்டத்தைத் தருகிறது. தேவனைப் பயபக்தியோடு போற்றுவதற்கும் அவருடைய சத்தத்தோடு இசைந்திருப்பதற்கும் நாம் உறுதியான முயற்சி எடுக்க வேண்டும் என்று ஞானி குறிப்பிடுகிறார். உண்மையில், தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதில் ஒரு நுட்பமான செயல்முறை உண்டு :-

(1) தேவன் என்ன கூறுகிறார் மற்றும் நாம் எதைக் கேட்கிறோம்,

(2) நாம் என்ன புரிந்துகொண்டோம் மற்றும் எதை நினைவில்கொள்கிறோம்.

(3) நாம் மறுபடியும் எதைக் கூறுகிறோம்.

**தேவன் என்ன கூறுகிறார் மற்றும் நாம் எதைக் கேட்கிறோம்**

வேதாகமத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, அதைக் கவனத்தோடு வாசிக்க வேண்டும். தேவனுக்குச் செவிக் கொடுப்பதற்கு நம்முடைய செவிகளையும், இருதயத்தில் புரிந்துகொள்ளுவதற்கு இருதயத்தையும் திறந்து வைத்திருப்பது அவசியம். இன்று நமக்கு ஈடு இணையற்ற உயர் தர வேதாகம மொழிபெயர்ப்புகளும், விளக்கவுரைகளும் கொடுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, கிறிஸ்துவ சகோதரர்களைச் சந்தித்து அவர்களோடு ஒருமித்துப் படிக்கவும் ஜெபிக்கவும் வாய்ப்புகளும் உள்ளது. ஆயினும் இன்னொரு பக்கம் பார்க்கையில், தொகை நோக்கால் (media saturated) நிறைந்த இந்த உலகில் ஈடு இனையற்ற அணியாக நம் கவனங்கள் திசை திருப்பப்பட்டுக்கொண்டிருப்பதன் காரணத்தால், நாம் தேவனின் வார்தைகளைக் கேட்பதே நமது "மையமாகக்" கொண்டிருக்க கடுமையாய் உழைக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கு ஜெபம் முக்கியமானதாக இருந்தாலும், அது பெரும்பாலும் மறக்கப்படுகிறது. ஜெபத்தின் காரியங்கள் நம்முடைய மனுஷ சித்தத்தை மையப்படுத்துகிறது மற்றும் தேவனிடம் நாம் கொண்டிருக்கும் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலைப் பெற்றுக்கொள்வதற்கும், நம்முடைய இருதயங்கள் தேவனுடைய வார்த்தையை உற்சாகத்துடன் கேட்பதற்கும் ஜெபமே சிறந்த வழியாகும்.

**நாம் எதைப் புரிந்துகொள்கிறோம், எதை நினைவுகூருகிறோம்**

கேட்பதைக் காட்டிலும் புரிந்துகொள்வதற்கு அதிகமான ஆற்றல் தேவைப்படுகிறது. நம்முடைய சிந்தையில், புரிந்துகொள்வதற்கு உறுதியான தியானமும், ஜெபமும், ஒருமனப்பாடும் தேவைப்படுகிறது. "உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்" (சங்கீதம் 119:15).

அதற்குப் பின் சத்தியத்தை தியானித்து, நடைமுறைப்படுத்துவதே, அதை நினைவில் கொள்வதற்கான திறவுகோலாகும். இதற்கு

நம்முடைய நேரத்தையும் சக்தியையும் கொடுக்க வேண்டுமென்பதை சாலொமோன் ஞானி கூறுகிறார். "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு. என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக" (நீதிமொழிகள் 23:23, 26).

நம்முடைய சிந்தை இளைப்பாறும்போது, அது எங்கு செல்கிறது? நம்முடைய வாழ்க்கையில் சத்தியத்தை நடைமுறைப்படுத்த உற்சாகத்தோடு வழிகளைத் தேடுகிறதா அல்லது நம்முடைய சிந்தை தற்காலிகமானக் காரியங்கள் அல்லது இன்றைய நவீன மீடியாக்களைச் (medias) சார்ந்த சந்தோஷங்களில் நம்மையே சுறுசுறுப்பாக ஈடுபடுத்திக்கொள்கிறதா?

இந்த உலகம், நம்முடைய மூளைகளை முடிவில்லாத பயனற்ற செய்திக் குறிப்புகளாய் முழுமையாக நிரப்பப் பெரும் முயற்சி எடுக்கும். இந்தச் செய்தி குறிப்புகள், நமக்குள்ளிருக்கும் தேவனுடைய வார்த்தைகளை வெளியேற்றும். "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!" (மத்தேயு 6:21-23) என்று இயேசு கூறினார்.

"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:21) என்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார். நாம் செவிகொடுக்காமல், புரிந்துகொள்ளாமல், அதற்குப் பின் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் சத்தியத்தை நடைமுறைப்படுத்தாவிட்டால், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் உருமாற்றக்கூடிய வல்லமையை நாம் என்றுமே உணர்ந்துகொள்ள முடியாது.

### நாம் எதை மீண்டும் மீண்டும் கூறுகிறோம்

தனிப்பட்ட முறையில் நாம் புரிந்துகொண்டதை மீண்டும் மீண்டும் கூறுவதே அதை நினைவில் பதிய வைப்பதற்கான சிறந்த சூத்திரமாகும். சிறைப்பட்டிருந்த அப்போஸ்தலர்களுக்குச் சுவிசேஷத்தை மீண்டும் மீண்டும் கூறுவதன் உடனடியான தேவையை தூதரின் செய்தி வலியுறுத்தியது."நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்" (அப்போஸ்தலர் 5:20). அப்போஸ்தலர்கள் அந்த உரையாடலை வாசிக்கவில்லை, அவர்கள் சிந்தையிலிருந்து எடுத்துரைத்தார்கள். அவர்களின் சிந்தையை சுவிசேஷம் முழுமையாக ஆட்கொண்டிருந்தது. அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைக் கேட்டுப் புரிந்துகொண்டு, அதன்படி தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தனர். எளிமையான, பண்புள்ள வார்த்தைகளை அப்போஸ்தலர்களின் வாயினால் பேசுவதற்கு, பரிசுத்த ஆவியே அவர்களை வழிநடத்தியது என்று புதிய ஏற்பாடு முழுவதும் சாட்சிக்கொடுக்கிறது. சுவிசேஷ யுகத்தின் முடிவில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், சத்தியத்தின் வார்த்தைகளை மீண்டும், மீண்டும் உச்சரித்து, நம்முடைய பங்கை நிறைவேற்ற வேண்டும். நாம் இப்படி செய்வதினால் தேவன் நம்முடைய முயற்சிகளைப் பெருகச் செயவார் என்று நாம் நிச்சயிக்கலாம்.

### நம்முடைய கண்கள் மற்றும் காதுகளினால் செவிகொடுத்தல்

"உன்னுடைய 20 ஈ மெயில்களை (E mail) வாசிப்பதைக் காட்டிலும் இரண்டு நிமிடங்கள் உன்னுடைய குரலைக் கேட்பது எனக்கு விருப்பமாக உள்ளது" என்ற ஒரு பாட்டி தன்னுடைய மாணவியிடம் கூறினாள். பலருக்கு காகிதத்திலுள்ள சிந்தைகளை வாசிப்பதைக் காட்டிலும், அந்த நபர் பேசும் வார்த்தைகளைக் கேட்பது பயனுள்ளதாக இருக்கிறது. நாம் நம்முடைய கண்களினாலும் காதுகளினாலும் கேட்பதே இதற்கான காரணமாகும்.

உண்மையில், முகமுகமாய்ப் பார்த்து செவிகொடுப்பதற்குப் பயன்படுத்தும் செய்தி தொடர்பு செயல்கள், வாசிப்பதற்கான செயல்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. முகமுகமாய்ப் பார்க்கும்போது நாம் இரண்டு வித்தியாசமான செய்திகளைப் பெறுகிறோம். நாம் அவர்களின் வார்த்தைகளை மட்டுமல்ல அவைகளின் தொனி (இசையலை அதிர்வு) மற்றும் வேகத்தையும், வார்த்தைகளின் இசையை நாம் கேட்கிறோம். நாம் மற்றவர்களோடு தனிப்பட்ட வகையில் தொடர்புகொள்ளும்போது, நாம் நம்முடைய வார்த்தைகளின் இசை மற்றும் அதன் அர்த்தத்தின் நுட்பமான கலவையை அனுப்புகிறோம். ஒரு புறம் நம்முடைய சிந்தைகளைத் தெளிவாக அறிவிப்பதற்குத் தேவையான வார்த்தைகளைத் தேர்வு செய்கிறோம். மற்றொரு புறத்தில், நம்முடைய

உணர்வுகளை - [இரக்கம், கோபம், இறுமாப்பு, தயக்கம், தடுமாற்றம் ] - அறிவிப்பதற்குத் தேவையான நம்முடைய வார்த்தைகளின் இசையைப் பயன்படுத்துகிறோம். இந்த உணர்வுகள் நம்முடைய வார்த்தையின் நோக்கத்தைத் தெரிவிப்பதற்கு உதவிசெய்கிறது. நம்முடைய வார்த்தைகளின் இசையின் எதிர்மறையான பாதிப்புகளைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 13:1-ஆம் வசனத்தில் நம்மை எச்சரிக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள ஆல்பெர்ட் மெஹராபியன் (Albert Mehrabian) என்ற ஒரு மனோதத்துவ நிபுணர் பேசப்பட்ட சம்பாஷணைகளில், 7% நம்முடைய வார்த்தைகளினால் தொடர்புகளும், 38% நம்முடைய வார்த்தைகளின் இசையலை அதிர்வுகளினால் தொடர்புகளும், 55% நம்முடைய முக பாவனையினால் தொடர்புகொள்ளப்படுகிறதென்று கணக்கிட்டார். ஆகையால் நாம் நம்முடைய கண்களினாலும், காதுகளினாலும் கேட்கிறோம். மற்றவர்களின் வார்த்தைகளின் அர்த்தத்தை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு நம்முடைய கண்களும் செவிகளும் தேவைப்படுகிறது.

**ஆவிக்குரிய பாடங்கள்**

தேவனுடைய நுட்பமான செய்திகளை அவரிடமிருந்து வரும் அவருடைய வார்த்தைகளின் நோக்கத்தின் வழியாகவும் இன்னிசையின் வழியாகவும் இப்போது நாம் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். எடுத்துக்காட்டாக தேவனுடைய இரட்சிப்பின் தெய்வீக திட்டத்தை நாம் பார்க்கும்போது, நம்முடைய சிறந்த உத்தமமான முயற்சிகளை ஒருமுகப்படுத்தி, அவைகளை நாம் கண்டுபிடிக்கும்படியாக, முழு வேதாகமத்திலும் தேவன் அதை ஒரு இரகசியமாக, பல தடயங்களோடு ஆங்காங்கே வைத்திருக்கிறார்.

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதியாகமம் 3:15) என்று வேதாகமத்தின் துவக்கத்தில் தேவன் சர்ப்பத்திடம் கூறினார். வேதாகமத்தின் முடிவில், "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" (வெளிப்படுத்தல் 22:3-5) என்று இயேசு வாக்களித்திருக்கிறார். தேவனுடைய நிறைவடையாத இரகசியங்களின் நோக்கங்களுக்கும் அதன் இன்னிசைக்கும், நம்முடைய காதுகளினாலும், கண்களினாலும் உற்சாகமாகச் செவிகொடுக்கிறோமா? அதற்குப்பின் அதைப் புரிந்துகொள்வதற்கு தேவனுடைய உதவியை நாடுகிறோமா?

நம்முடைய மூளை புரிந்துகொள்ளும்படியாக, நம்முடைய காதுகள் ஒலி அதிர்வுகளை உருமாற்றுவதுபோல தேவனுடைய திட்டம், ஆங்காங்கே துண்டுகளாகச் சிதறியிருக்கும் புதிரைப்போல் உள்ளது. அவைகளை நாம் சரியாக ஒன்றுசேர்க்கும்போது அதற்குள்ளான இசைவைக் காணமுடியும். இதற்கு நம்முடைய ஆவிக்குரிய சிந்தை தேவை. இந்த இசை உலகத்தில் நாம் கேட்கக்கூடியவைகள் இனிமையாக இருப்பதைக் குறிப்பிடுவதற்கு, "ஒத்திசை அல்லது இசைந்து" என்ற வார்த்தையை நாம் வழக்கமாகப் பயன்படுத்துகிறோம். வசனங்களில் தேவனுடைய வார்த்தைகளுக்கு நாம் செவிகொடுக்கும்போதும், அவைகள் வரலாற்றுப் பக்கங்களிலும், நிகழ்காலத்திலும் செயல்பட்டிருப்பதை நாம் காணும் போதும், வல்லமையும், அன்பும், ஞானமும் உள்ள சிருஷ்டிகரின், மனுக்குலத்திற்கான நீதியுள்ள திட்டத்தின் நம்புதற்கரிய அழகும், ஒத்திசைவும் நம்மை ஆட்கொள்ளுகிறது.

நம்முடைய விசுவாசத்திற்கு, இரட்சிப்பின் திட்டம் எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், அது நம்முடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் ஒரு பகுதியாக மட்டுமே உள்ளது. தேவனுடைய வார்த்தைகளிலுள்ள கடினமான காரியங்களையும் புரிந்துகொள்வதற்கு, நாம் நம்முடைய ஆவிக்குரிய செவி கொடுத்தலையும், புரிந்துகொள்ளுதலையும் ஒருமுகப்படுத்த வேண்டும். எடுத்துகாட்டாக, "பின்பு அவர் ஜனங்களை வரவழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டு உணருங்கள்" (மத்தேயு 15:10) என்று இயேசு நம்முடைய நடத்தையைக்குறித்து எச்சரிக்கிறார். தேவனுடைய வார்த்தையைப்பிரசங்கிப்பதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார். "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக்கேள்விப்படுவார்கள்?" (ரோமர் 10:14).

தேவனுடைய முழுமையான ஆலாசனையை நாம் செவிகொடுத்து புரிந்துகொள்வதற்கும், நம்முடைய கிறிஸ்துவ வளர்ச்சிக்கும், நெருங்கிய தொடர்பு உண்டு.

தேவனுடைய அன்பை நாம் புரிந்துகொள்வதைக்குறித்து வசனங்கள் இரண்டு கோணங்களில் பேசுகிறது. நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் அன்பு மற்றும் நமக்குள்ளிருந்து பிரதிபலிக்கும் வேதனுடைய அன்பு. முதல் கோணத்தில், ஒரு குழந்தை தன்னுடைய பெற்றோரைப் பற்றி புரிந்துகொள்வதற்குமுன் அவர்களின் அன்பை செவிகொடுத்து உணர முடிந்ததுபோல், இந்த மனுக்குலமும், தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கு முன் அவருடைய அன்பிற்கு செவிகொடுத்து உணர வேண்டும்.

பெரும்பாலான மனுக்குலம் இதை உணர தவறியிருக்க நாம் தேவனுடைய அன்பைக் கேட்பதற்கும் உணருவதற்கும் மட்டுமல்ல, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பின் செய்தியைப் புரிந்துகொள்வதற்கான பாக்கியத்தையும் பெற்றிருக்கிறோம். "உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 8:39), இந்தச் சத்தியத்தின் புரிந்துகொள்ளுதலை நாம் மிகக் கவனமாகக் காத்துக்கொண்டு, நம்முடைய எதிராளியின் சோதனைகளிலிருந்து அதைப் பாதுகாக்க வேண்டும்." நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மாற்கு 14:38) என்று இயேசு நம்மை எச்சரிக்கிறார்.

இரண்டாம் கோணத்தில், ஒரு குழந்தை பிறந்து, தன்னுடைய பெற்றோரின் மொழியைக் கற்றுக்கொண்டு, உண்மையில் துரிதமான வளர்ச்சியடையும்போது அந்தக் குடும்பம், சிந்தையிலும் புரிந்துகொள்ளுதலிலும் ஒன்றித்துவிடும். அதுபோல, நாம் தேவனுடைய மொழியைக் கற்றுக்கொண்டு, தனிப்பட்ட முறையில் நம்முடைய வாழ்க்கையில் அதை நடைமுறைப்படுத்தும்போது, ஆவியிலும், புரிந்துகொள்ளுதலிலும், தேவனோடும், இயேசுவோடும் ஐக்கியப்பட்டிருக்க வாய்ப்புகள் கிடைக்கும். "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 2:5) என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். ஒருவேளை, நம்முடைய செவிகொடுத்தல், புரிந்துகொள்ளுதல் மற்றும் அவருடைய வார்த்தைகளைக் காத்துக்கொள்வதின் வழியாக, தேவனுடைய அன்பில் பூரணப்படுவதன் மூலம் நாம் சுயமுன்னேற்றம் பெறுவதற்கான சிறந்த வாய்ப்புகளைப் பெறலாம்.

### குறைபாடுள்ளஆவிக்குரிய செவிகொடுத்தலை மேம்படுத்துதல்

அதிகமான சத்தத்தினால், நம்முடைய செவிகள் கேட்கும் திறனை இழப்பதற்கு வாய்ப்புண்டு. பலர் மின்விசிறியின் சத்தத்திற்கும், விமானத்தின் இன்ஜின்களின் சத்தத்திற்கும் வல்லமை மிக்க கருவிகளின் அதிகமான சத்தத்திற்கும் தங்களுடைய செவிகளைப் பாதுகாக்காமல் விட்டதினால், அவர்களின் செவிகள் பாதிப்படைந்துள்ளது. 90 டெசிபெல்களுக்குமேல் கேட்கக்கூடிய சத்தம் நம்முடைய கோக்கிலியாவின் (cochlea) முடிவுகளை அழித்துவிடும். செவிகளைப் பாதுகாப்பதன் வழியாக இந்தச் சேதங்களைத் தவிர்க்கலாம்.

அதிகப்பட்சமான சத்தத்தினாலும் நம்முடைய ஆவிக்குரிய செவிகொடுத்தல் (புரிந்துகொள்ளுதல்) சேதமடைவதற்கு வாய்ப்புண்டு. மனுஷரின் இரைச்சலுள்ள போதனைகள் மற்றும் அவர்கள் வாக்களிக்கும் ஏராளமான பூமிக்குரிய சந்தோஷங்களுக்கு மத்தியில் தேவனுடைய குரலுக்குச் செவிக்கொடுப்பது கடினமானக் காரியம் மாம்சத்தின் பாவமுள்ள இச்சைகள் மற்றும் மாம்சத்தின்மேலான இடிபாடுகள் இவை இரண்டுமே நாம் கேட்கக்கூடிய தேவனுடைய வார்த்தைகளை எளிதில் சேதப்படுத்திவிடும். மனித பொதுநல இயல்பு (Humanism) மற்றும் அறிவாற்றலும், அபாயமானது. ஏனெனில், இவைகள் தேவன் ஒருவர் உண்டு என்பதை மறுத்து, எப்படியோ அவர் நமக்குள் இருக்கிறார் என்று கோருகிறது. இவ்வகையான உலகத்தின் குரல் உரத்த சத்தமாக ஒலிப்பதைக் காட்டிலும் மிக நுட்பமாகச் செயல்படுகிறது. வேதாகமம் புராண கதைகளினாலும், கற்பனை கதைகளினாலும் நிறைந்திருப்பதாகவும் கோரி, நம்முடைய விசுவாசத்தை அரித்துவிடுகிறது.

அடுத்து, போட்டியிடக்கூடிய சமுதாய வன்முறை மற்றும் இனம் பற்றின இரைச்சல்களும்

காணப்படுகிறது. அதில் இந்த உலகத்தின் சண்டை சச்சரவுகளோடு போராடுவதற்கு பிதாவும் இயேசுவும் நம்மை ஊக்குவிக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்கு சில கிறிஸ்தவர்கள் முயற்சிக்கிறார்கள். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் (மத்தேயு 5:44) என்று இயேசு தெளிவாகக் கூறியுள்ளார்.

நாம் இயேசுவுக்கு கவனமாகச் செவிகொடுத்து, மற்ற அபாயமான இரைச்சல்களிலிருந்து நம்முடைய ஆவிக்குரிய செவிகொடுத்தலைப் பாதுகாக்க வேண்டும். தேவனோடு இசைந்திருப்பதிலிருந்து நம்மை மிக எளிதாக வழிவிலகச் செய்வதற்கு இந்த இடத்தில் பரிசேயர்களின் தவறுதல், காரணமாக இருப்பதைக் காட்டுகிறது. "என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?" (யோவான் 8:43).

தேவனுடைய வார்த்தை, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக அவர்களிடம் பேசப்பட்டதைக் கேட்க மறுத்ததால், பரிசேயர்களின் தவறுக்கு அடிப்படையாக இருந்தது. பரிசேயர்கள் தங்களுடைய யுகத்தின் பாரம்பரியத்தையும் போட்டியிடக்கூடிய இரைச்சல்களை எளிமையாக அனுமதித்து, இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைப் புறக்கணித்தார்கள். நாமும் நம்முடைய கிறிஸ்தவ குணலட்சணங்களைச் சரியாகப் பேணிக் காக்காவிட்டால், நாமும் இப்படிப்பட்ட அபாயத்தில் சிக்கிவிடுவோம். நம்முடைய வாழ்க்கையில் சத்தியம் சரியான பாதிப்புகளை ஏற்படுத்தும்படியாக, ஆண்டவரோடும், சத்தியத்தோடும் நம்முடைய சகோதரர்களோடும் நெருங்கிய ஐக்கியத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் (எபிரெயர் 4:12).

**¨வருங்காலத்தில் பரிபூரண ஆவிக்குரிய செவிக்கொடுத்தல்**

கிறிஸ்துவின் ஆட்சியில், செவிடர்கள் அற்புதமாக சுகமளிக்கப்படுவார்கள் என்பதும், திரும்பக்கொடுத்தலின் வாக்குத்தத்தத்தில் உள்ளடங்கியுள்ளது. "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" (ஏசாயா 35:5). சரீர ரீதியான செவிடர் மற்றும் ஆவிக்குரிய செவிடராகிய இரு சாராரும் அற்புதமாகக் குணமாக்கப்படுவார்கள். இதை நிறைவேற்றும்படியாக, எந்தக் கஷ்டமும் இல்லாமல், இந்த உலகத்தின் மனுக்குலம் புரிந்துகொள்வதற்கு எளிதான ஒரு மொழியைப் பேசுவதாக தேவன் வாக்களித்திருக்கிறார். "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" (செப்பனியா 3:9). எவ்வளவு அருமையான வாக்குறுதி,

அற்புதமாக ஒரு நபர் திடீரென்று கேட்கும் திறனைப் பெற்றதைக்குறித்து சமீப காலத்தில் கேட்பதற்கான உதவியைப் பயன்படுத்தி, செவிடாய் இருந்த ஒரு குழந்தை முதல் முறையாகக் கேட்பதை, பிபிசி தொலைகாட்சி மிக அருமையாகக் காட்டியது. அருகிலுள்ள வருங்காலத்தில் இந்த உலகத்தின் முழு மனுக்குலமும் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும். இறுதியில் அதன் சுத்தமான மொழியைப் புரிந்துகொள்வார்கள், மனுக்குலத்தின் பில்லியன் கணக்கானவர்களின் ஆசீர்வாதங்களின் வாக்குத்தத்தங்களை நாம் நம்புகிறோம். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9; ஆபகூக் 2:14).

தேவனைப்பற்றி தெளிவாகப் புரிந்துகொள்வதும், அவருக்குச் செவிகொடுப்பதே முழு மனுக்குலத்தின் விருப்பமான நம்பிக்கை. ஆயினும், அனைவரும் நித்தய ஜீவனைப் பெற்றுக்கொள்ள நித்தமும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (ஏசாயா 28:17).

இன்று தேவனுடைய பிள்ளைகள், தேவனுடைய குரலைக் கேட்டு அதைப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை முன்னதாகவே நாம் பெற்றிருப்பதற்கு நம்முடைய உண்மையுள்ள ஒருமனப்பட்ட முயற்சிகள் தேவைப்படுகிறது. விலையேறப்பெற்ற முத்து என்ற உவமையில், கற்பிக்கப்படுவதைப்போல, நம்முடைய இந்தப் பூமிக்குரிய தேவையற்ற இரைச்சல்களிலிருந்து (சுமை) விலகி, நாம் பெற்ற இந்தப் பெரிதான வாய்ப்பை நோக்கி, நம்முடைய முழு நேரத்தில், சக்தியோடு எப்போதும் வேலை செய்ய வேண்டும்.

# வாசனை



Len Griehs

"சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை" (ஆதியாகமம் 8:21).

ஜலப்பிரளயம் முடிந்தவுடன், நோவா ஏறெடுத்த நன்றியறிதலான பலிகள், தேவனுக்குப் பிரியமான நறுமணமாக இருந்தது. நோவா செலுத்தின பலியினால் தேவன் உண்மையில் அமைதியானாரா? "nihoah" என்ற எபிரெய வார்த்தை "சுகந்த வாசைன" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நோவா என்ற பெயருக்கு சம்பந்தப்பட்டிருக்கும் இந்த எபிரெய பதம் பலியின் சுகந்த வாசனைக்கு எப்போதும் தொடர்புள்ளதாகக் காணப்படுகிறது. நோவாவின் கீழ்ப்படிதல் மற்றும் சுற்றியுள்ள துன்மார்க்கத்தின் மத்தியில் தனியாக நிற்பதற்கான துணிச்சலின் நிமித்தம், யேகோவா தேவன் அவர்மேல் பிரியமாக இருந்தார்.

வேதாகமத்தின் துவக்க வரலாற்றில், உணர்வுகளை விவரிப்பதற்கு உருவகமாக வாசனை பயன்படுத்தப்பட்டது. யேகோவா தேவனுக்கும் பயன்படுத்தப்பட்டது. மனிதனுடைய சிருஷ்டிப்பு (ஆதியாகமம் 1:31). ஜலப்பிரளயத்தில் மனுஷரின் அழிவு (ஆதியாகமம் 6:5, 6) மற்றும் ஜலப்பிரளயத்திற்குபின், புதிய துவக்கம், இவையெல்லாம் பார்வை மற்றும் வாசனை என்ற உணர்வுகளோடு இணைக்கப்பட்டுள்ளது. ஜலப்பிரளயத்திற்கு முன் மனுக்குலத்தின் வீழ்ச்சியைக் கண்டு தேவன் அதிகமாக விசனப்பட்டாலும், நோவாவின் நீதியுள்ள பார்வை (ஆதியாகமம் 6:9) மற்றும் ஜலப்பிரயத்திற்குப் பின் அவர் ஏறெடுத்த பலியின் சுகந்த வாசனை தேவனை அதிகமாகப் பிரியப்படுத்தியது.

#### வாசனை ஒரு முக்கிய தாக்கம்

முகர் உணர்வு என்பது மற்ற புலன்களைப்போலவே, பொருட்களைக் கண்டறிய மற்றும் உணர உதவுகிறது. இது இன்பம் அல்லது அருவருப்பைத் தரக்கூடியது. முகர் உணர்வு கற்பனையை ஊக்குவிக்கும்.

மனிதன் ஒரு வாசனையை 65 சதவிகித துல்லியத்துடன் ஓர் ஆண்டிற்குப் பிறகுகூட நினைவில் வைத்துக்கொள்ள முடியும் என்று ஆய்வுகள் கூறுகிறது. ஏதேனும் ஒரு வாசனையை முகர்ந்தால், பல ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளை நினைவூட்டவல்லது. மறந்துப்போன கடந்த நிகழ்வுகளை ஒரு குறிப்பட்ட வாசனையைக் கண்டறிந்து, அந்த நிகழ்வுகள் தன்னிச்சையாக மனதில் தோன்றும். ஆபிரகாம்சன் மற்றும் பீரிட்மேன் (Abrahamson and Freedman) தன்னுடைய "A Perfect Mess: the Hidden Benefits of Disorder" என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "ஒரு பொருளை ஞாபகப்படுத்த, அதனுடன் தொடர்புடைய வாசனையைத் தவிர வேறெந்த உணர்ச்சியாலும் இயலாது."

சிக்காகோவிலுள்ள முகர்வு மற்றம் சுவையைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஆலேன் ஹிர்ச், (Alan Hirsch) மனித நடத்தையில் முகர்வின் விளைவைக்குறித்து, பல ஆய்வுகள் செய்துள்ளார். இவர், "மூளையில் முகர்தல் மற்றும் சுவைத்தலில் பயன்படும் பகுதியில்தான் மனிதனின் தனித்தன்மையை வரையறுக்கும் பகுதி உள்ளது" என்று Men’s Health பத்திரிக்கையின் பேட்டியில் குறிப்பிட்டார். பேரங்காடியிலுள்ள விற்பனையாளர்கள் தங்களது கடையின் நுழைவு வாயிலின் அருகில் மகிழ்ச்சியூட்டும் நறுமணத்தை, வாடிக்கையாளர்களை ஈர்க்க வைத்திருப்பார்கள்.

மிகக் கொடூரமான ஜெர்மன் நாஜி சித்திரவதை முகாமிலிருந்து உயிர் பிழைத்த, பார்பரா ஹைட் (Hyett) என்பவர், "The Education of Desire: towards a Theology of the Senses,"- இல் அவர் அனுபவத்தைப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் - "அடுப்புகளின் துர்நாற்றம், அதை நான் மீண்டும் நினைவில்கொள்ளக்கூட விரும்பவில்லை. நீங்கள் சுவாசிக்க வேண்டும். நீங்கள் அருவருப்பதைப் பார்க்காமல் இருக்க கண்களை மூடிக்கொள்ளலாம். கேட்க விரும்பாததைக் கேட்காமலும், சுவைக்க விரும்பாததைச் சுவைக்காமலும் இருக்கமுடியும்.

முகர்தலைத் தவிர மற்ற எல்லா உணர்ச்சிகளையும் தவிர்க்கமுடியும். இந்த நிலைமையில் துர்நாற்றம் எனக்கு குமட்டலை ஏற்படுத்தியது."

உணர்ச்சி வசப்படும் மகிழ்ச்சி அல்லது உணர்ச்சி வசப்படும் வேதனையை விதவிதமான மனங்கள் எவ்வாறு வருவிக்கிறது என்று மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டுகள் தெரிவிக்கிறது. ஆசையின் உணர்வுகளை மனம் தூண்டும். வசனங்களில் நல்லொழுக்கங்களைக் குறிப்பிடுவதற்கு மனம் உருவகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. கிரியைகள், தேவனுக்கு இனிமை யாகவும், உகந்ததாகவும் இருக்கலாம், அல்லது சீற்றத்தையும் ஏமாற்றத்தையும் வருவிக்கலாம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய பலிகளையும், நடத்தையும் சுதந்தவாசனை அல்லது நறுமனம் என்று அழைக்கப்படுகிறது (யாத்திராகமம் 29:18; எபேசியர் 5:2; பிலிப்பியர் 4:18). இதற்கு எதிரிடையாக துர்நாற்றம் ஒழுக்ககேடான குணங்களோடு சம்மந்தப்பட்டிருக்கிறது (ஏரேமியா 48:11). நம்முடைய நோக்கங்கள் மற்றும் கிரியைகளினால் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு தனித்துவமான வாசனையை நாம் உருவாக்கிக்கொள்கிறோம்.

### முகர்தலின் பரீட்சை

நாம் குறிப்பிடும் ஏதோ ஒரு சூழ்நிலை, அது வரையறுக்க முடியாத ஒன்றாய் இருந்து, அதனால் ஏற்படும் நிகழ்வு சரியில்லாமல் இருந்தால், ஆங்கிலத்தில் இதை ஒரு செற்றொடர் மூலம் விவரிக்கலாம். "there’s something fishy about this" என்பதை இதுவரையில், வரையறுத்துக் கூற இயலவில்லை. இது, "நுகர்வு சோதனை" என்ற இன்னும் ஒரு ஆங்கில மரபு வழக்கின் அடிப்படையில் கூறப்படுகிறது. நமது பொதுவான புலன்களான தத்துவம், நெறிமுறை, ஆன்மநிலை போன்றவற்றைக் கொண்டு, ஒரு நிகழ்வு அதிகாரப்பூர்வமானதா, நம்பிக்கைக்குரியதா என்பதன் கருத்தை நாம் தெரிந்துகொள்ளலாம். அந்த நிகழ்வு நாம் கேள்விப்பட்டவரை அல்லது உணர்ந்தவரை சரியாக நமக்குத் தோன்றவில்லையென்றால் அந்த "நுகர்வு சோதனை தோல்வியுறுகிறது" - இது நம் உள்ளார்ந்த புலன்களின் நேர்மையை வெளிப்படுத்தும். அந்த நிகழ்வு முறைகேடானதும், ஏமாற்றக் கூடியதாயும், கேள்வி எழுப்பத்தக்கதாகவும் இருக்கிறது என்று நாம் தீர்ப்பளிக்கலாம்.

### ஆவிக்குரிய நுகருதலின் பரீட்சைகள்

“பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின்வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.” (எபிரெயர் 5:13-14).

வேதத்தைப்படித்து அதைப் பழக்கப்படுத்துவதன் வழியாக, நம்முடைய ஆவிக்குரிய புலன்களை நாம் பயிற்றுவிக்கிறோம் என்று புவல் கூறுகிறார். நாம் கூர்மையான ஆவிக்குரிய "மூக்கைப்" பெற்றிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தீமையானதை முகர்ந்துப்பார்த்து புறக்கணிக்கவும், அதேநேரத்தில் தேவனுடைய நறுமணத்தைக் கண்டுபிடிப்பதற்கும் தேவனுடைய வார்த்தைகளில் தேர்ச்சிப் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று பவுல் நமக்குக் கற்பிக்கிறார். (2 கொரிந்தியர் 2:14). "நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங்கீதம் 119:11) என்று சங்கீதக்காரர் கூறுகிறார். பரிசேயர்களுடைய விமர்சனத்திற்கு இயேசு பதிலளிக்கையில், மத்தேயு 22:29-ஆம் வசனத்தை மேற்கோள் காட்டினார். "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்." விமர்சனங்களுக்கு நாமும் இவ்வாறாகவே பதிலளிக்க வேண்டும். "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோத்தேயு 2:15). தேவனுடைய வார்த்தை திரும்ப ஞாபகப்படுத்துவதற்கும், நியாயம் கற்பிப்பதற்கும் நாம் நம்முடைய பகுத்தறிதலை கூர்மையாக்கிக்கொள்ள வேண்டும். இப்படியாக, சவாலான சூழ்நிலைகளையும், திறமையாக சமாளிப்பதற்கு வழிவகுக்கும். ஆவிக்குரிய காரியங்களில் நாம் இன்னும் அதிக வெற்றிகளைப் பெறுவோம் என்று உணர்வோம்.

**தேவனுக்குகந்த சுகந்தவாசனை**

உண்மையான கிறிஸ்தவரினால் நல்ல குணங்கள் வெளிப்படும். மற்றவர்களை கிறிஸ்துவுக்குள் நடத்துவதற்கு இதுவே அடிப்படையாக மதிப்பிடப்படுகிறது. "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவானமரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?" (2 கொரிந்தியர் 2:14-16).

"ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 5:1, 2).

தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலோடு, இயேசுவின் நாமத்தினால் ஏறெடுக்கும் பலிகளின்மேல் தேவன் பிரியமாக இருக்கிறார் (1 சாமுயேல் 15:22). "அவர் அவர்களை நோக்கி: 'நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது'" (லூக்கா 16:15). மனப்பூர்வமாக ஏறெடுக்கும் பலிகளைக்கொண்டு தேவன் நம்முடைய கீழ்ப்படிதலை அறிந்துகொள்வார். நம்மைக் காணக்கூடியவர்கள் நம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு, நாம் எடுக்கக்கூடிய உண்மையான முயற்சிகள், நம்முடைய வாழ்க்கையில் காணப்பட வேண்டும். நம்முடைய சகோதார்களுக்கு ஊழியஞ்செய்வதிலும், அவர்களுடைய சொந்த முயற்சியினால் தேவனை சேவிப்பதற்காக நாம் அவர்களுக்குச் செய்யும் உதவிகளின் வழியாக நம்முடைய கீழ்ப்படிதலை நாம் செயல்படுத்துகிறோம்.

"தந்தத்தினால் செய்த அரமனைகளிலிருந்து புறப்படுகையில், நீர் மகிழும்படி உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளம் சந்தனம் இலவங்கம் இவைகளின் வாசனை பொருந்தியதாயிருக்கிறது" (சங்கீதம் 45:8).

நாம் கிறிஸ்துவின் வழியாக, அவருக்காக வாழ்ந்தால், நம்முடைய வாழ்க்கை நறுமணமுள்ள சுதந்த வாசனையாக இருக்கும். நம்முடைய வாழ்க்கையில் நாம் இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்ற தெளிவான குறிப்பு காணப்படும். குடும்பம், பரிட்சயமானவர்கள் மற்றும் நம்முடன் வேலை செய்பவர்களும் நாம் வாழுகிறதுபோல வாழமாட்டார்கள். ஆனால் நாம் தேவனை சேவிப்பதற்கான நம்முடைய முயற்சிகளையும், கிறிஸ்துவே நம்முடைய வாழ்க்கை முறையில் முதன்மையான இலக்காக இருப்பதை அவர்கள் காண வேண்டும். பண்டைய காலத்தில் ரோமாபுரி பெற்ற வெற்றிகளை, பட்டணத்திற்குள் ஊர்வலம் வந்து, மேள வாத்தியங்களோடு, தூபவர்க்கத்தின் நறுமணத்தினாலும் கொண்டாடுவது வழக்கமாக இருந்தது. சற்று அப்புறத்தில் வாழும் பட்டணத்து வாசிகள், ஊர்வலம் செல்லும் பாதைக்கு அருகாமையில் இராததினால் அவர்களால் அந்த ஊர்வலத்தைக் காணமுடியாமல் போனாலும், அங்குள்ள சுகந்த வாசனையை முகர்ந்து ரோமாபுரியின் வெற்றியை அறிந்துகொள்வார்கள். அதுபோல, நம்மைச் சார்ந்தவர்கள் வேதாகம நல்லொழுக்கத்திற்கான நம்முடைய அர்ப்பணிப்பை அறிந்துகொள்வார்கள் (பிலிப்பியர் 4:8). நம்முடைய சந்தோஷங்களுக்கும் வெற்றிகளுக்கும் காரணங்களை அவர்கள் அறியாதிருந்தாலும், அவைகளை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்" (2 கொரிந்தியர் 2:15).

**எப்போது வாசனை வேதாகம வரலாற்றை மாற்றியது?**

"ஈசாக்கு முதிர்வயதானதினால் அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப் போனபோது, அவன் தன் மூத்த குமாரனாகிய ஏசாவை

அழைத்து, என் மகனே என்றான்; அவன், இதோ, இருக்கிறேன் என்றான். அப்பொழுது அவன்: நான் முதிர்வயதானேன், என் மரணம் இன்ன நாளில் என்று அறியேன். ஆகையால், நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்தூணியையும் உன் வில்லையும் எடுத்துக்கொண்டு வனத்துக்குப்போய், எனக்காக வேட்டையாடி, அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டுவா என்றான்" (ஆதியாகமம் 27:1-4).

"அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனை நோக்கி: என்மகனே, நீ கிட்ட வந்து என்னை முத்தஞ்செய் என்றான். அவன் கிட்டப் போய், அவனை முத்தஞ்செய்தான்; அப்பொழுது அவனுடைய வஸ்திரங்களின் வாசனையை மோந்து: இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப்போல் இருக்கிறது" (ஆதியாகமம் 27:26-27).

கூழுக்காக ஏசா தன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்றுபோட்டார். ஈசாக்கு ஏசாவிடம் பேசுவதை ரெபேக்காள் மறைந்திருந்து கேட்டபோது, கிட்டதட்ட பார்வையற்றிருந்த ஈசாக்கிடமிருந்து, அந்த ஆசீர்வாதங்களை, யாக்கோபு பெற்றுக்கொள்வதற்காக அவரை ஏசாவைப்போல வேஷம் போடச்சொன்னாள்.

ஈசாக்கு பார்வையற்று இருந்தாலும், தன்னுடைய குமாரன் மேலிருந்த வயல் வெளியின் வாசனையை முகர்ந்ததினால், ஏசாவிடம் பேசிக்கொண்டிருந்ததாக அவர் யூகித்தார். யாக்கோபின் வஞ்சகம் துவக்கத்தில் நமக்குக் குழப்பமாகத் தோன்றினாலும், "மூத்தவன் இளையவனை சேவிப்பான்" (ஆதியாகமம் 25:23) என்று யேகோவா தேவன், ரெபேக்காளிடம் முன்னதாகவே அறிவித்தருந்தார். அந்நேரத்தில் அறியப்படாத காரணங்களினால், ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்கள், வம்சவழியாகக் கடந்துச் செல்வதற்குத் தேவன் யாக்கோபைத் தெரிந்துகொண்டார். தன்னுடைய சேஷ்டபுத்திர சுவிகாரத்தின் உரிமைகளை முன்னதாகவே யாக்கோபு வஞ்சித்ததை ஈசாக்கிடம் கூறியிருந்திருக்கலாம் (தெளிவான விவரங்களுக்கு, மறுபதிப்பு R1624-ஆம் பக்கம் பார்க்கவும்). யாக்கோபை ஏசா என்று முடிவெடுப்பதற்கு, அந்த வயல் வெளியின் வாசனையே ஈசாக்குக்கு உதவியாக இருந்தது.

"ஒவ்வொரு நபருக்கும், விரல் ரேகையைப்போல தனிப்பட்ட வாசனை உண்டு. இரட்டையர்களில் ஒருவரைக்கூட, அவரின் வாசனையை ஒரு நாயால் மோப்பம் பிடித்து அடையாளம் கண்டுகொள்ளமுடியும் என்று டையானா ஆக்கர்மேல் (Diane Ackerman) "A Natural History of the Senses" எழுதிய புத்தகத்தில் குறிப்பிடுகிறார். "மனித வாசனைகள் வேறுபடுகிறது, அவைகள் கைகள் மற்றும் முகங்களை அடையாளங்கண்டுகொள்ளும் திராணியுள்ளது" என்று தத்துவ ஞானியான ஹெலன் கில்லர் (குருடும், செவிடும்) கூறுகிறார். குரலை அடையாளங்கண்டுகொண்டு, ஏசாதான் மெய்யாகவே தன் முன்னால் அமர்ந்திருக்கிறார் என்று முடிவுசெய்ய ஈசாக்கின் தொடுதல் மற்றும் முகர்தலின் திறமை பயன்படுத்தப்பட்டதில் வியப்பேதும் இல்லையே (ஆதியாகமம் 27:27).

**ஆசாரிப்புக்கூடாரத்தின் வாசனை**

"ஆரோன் காலைதோறும் அதின்மேல் சுகந்த தூபங்காட்டவேண்டும்; மாலையில் விளக்கேற்றும்போதும் அதின்மேல் தூபங்காட்டக்கடவன்; விளக்குகளை விளக்கும்போதும் அதின்மேல் தூபங்காட்டவேண்டும். உங்கள் தலைமுறைதோறும் கர்த்தருடைய சந்நிதியில் காட்டவேண்டிய நித்திய தூபம் இதுவே" (யாத்திராகமம் 30:7-8). "பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: சுத்த வெள்ளைப்போளமும் குங்கிலியமும் அல்பான் பிசினுமாகிய கந்தவர்க்கங்களையும் சுத்தமான சாம்பிராணியையும் நீ சமநிறையாக எடுத்து, தைலக்காரன் செய்கிறதுபோல அதற்குப் பரிமளமேற்றி, துப்புரவான பரிசுத்த தூபவர்க்கமாக்கி, அதில் கொஞ்சம் எடுத்துப் பொடியாக இடித்து, நான் உன்னைச் சந்திக்கும் ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கும் சாட்சி சந்நிதியில் வைப்பாயாக; அது உங்களுக்கு மகா பரிசுத்தமாயிருக்கக்கடவது" (யாத்திராகமம் 30:34-36).

சுகந்த வெள்ளைப்போளமும், குங்கிலியமும், அல்பான் பிசினும், சுத்தமான சாம்பிராணியையும் சம

அளவு எடுத்து தைலக்காரன் செய்கிறதுபோல அதற்குப் பரிமளம் ஏற்றி துப்பரவான தூபவர்க்கமாக்கி ஆசரிப்புக்கூடாரத்திலும் (லேவியராகமம் 16) அதற்குப் பின் ஆலயத்திலும் பயன்படுத்தினார்கள். பழங்கால வெள்ளைப்போளத்தைப் பொருத்தவரையில் சரியாகக் குறிப்பிடமுடியாமல் போனலும், அதற்கு ஒரு வேறுப்பட்ட நறுமணம் இருந்திருக்க வேண்டும் (2 நாளாகமம் 13:11). ஒப்புரவாகுதலின் நாளின்போது, மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் யேகோவா தேவனின் பிரசன்னத்திற்கு பிரதான ஆசாரியன் செல்லுவதற்குமுன் நறுமணத்தின் புகை மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் கிருபாசனத்தை முழுமையாக மூட வேண்டும் (லேவியராகமம் 16:13). சுகந்த வர்க்கத்தின் ஒவ்வொரு உட்பொருளும், அடையாளங்கண்டுகொள்ளமுடியாதபடிக்கு அவைகள் பொடிப்பொடியாக நொறுக்கப்பட்டது.

அந்தச் சுகந்தவாசனை, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றிய இயேசுவின் முழுமையானதும், பூரணமான பலியை அடையாளப்படுத்துவதாகக் கருதப்படுகிறது (ஆசரிப்புக் கூடாரத்தின் நிழல்கள்). முதல் மிருகமாகிய காளையின் பலிக்கு முன்னதாகச் சுகந்தவாசனை பயன்படுத்தப்பட்டது. சுவிசேஷ யுக சபையை முழுமையாக அடையாளப்படுத்தும் இரண்டாவது மிருக பலியாகிய ஆட்டின் பலிக்குமுன் ஏறெடுக்கப்பட்ட சுதந்தவாசனையினால் மட்டுமே தேவன் பிரியமானார். பாஸ்டர் ரசலின் விளக்கக்குறிப்புகளைத் தொடர்ந்து காணலாம்.

"ஜெபங்கள், ஆராதனை, மற்றும் துதிகள், ஆண்டவருக்கு நேரடியாக ஏறெடுக்கும் "சுகந்த வாசனையான" காணிக்கையாக இருந்தாலும் அவருடைய ஆவியைப் பெறாமல், நாம் இந்த உத்தமமான அங்கீகரிக்கப்பட்ட காணிக்கைகளை ஏறெடுக்க முடியாதபடிக்கு அவர் காரியங்களை ஒழுங்கு செய்திருக்கிறார். மற்றும் நாம் அவருடைய ஆவியைப் பெற்றிருந்தால், நாம் பொன்னாலான பலிபீடத்தில் நறுமணப் பொருட்களை பலி செலுத்துவதுடன், நமது சிறந்த செயல்களால் வெண்கல பலிபீடமான பிரகாரத்திலும் பலி செலுத்த இயலும் (கலாத்தியர் 6:10)(R 2551).

இயேசுவின் சித்தம் செய்வதற்கு ஒருமுறை நாம் நம்முடைய சொந்த சித்தத்தை விட்டுக் கொடுத்தால், தேவனுடைய ஜனங்கள் மத்தியில் செயல் புரிவதற்கான வாய்புகளைத் தேடுவதற்கு நாம் பலவந்தம் பண்ணப்படுவதை நாம் உணரலாம். ஆசரிப்புக்கூடாரத்தில் செலுத்தப்படும் சுகந்த வர்க்கத்தின், ஒவ்வொரு உட்பொருளும் இப்படிப்பட்ட பலியின் ஜீவியத்தை அடையாளப் படுத்துவதாகக் கருதப்படுகிறது. சுகந்தவர்க்கமாகிய ஒரு பிசின்வகை சாம்பிராணி என்றும் அழைக்கப்படுகிறது. இதற்குக் "கசப்பு" என்று பொருள். இயேசு குழந்தையாக இருக்கும்போது, இந்தச் சுகந்தவர்க்கம் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது (மத்தேயு 2:11). பாவநிவாரண பலியாக இயேசு தம்மை ஒப்புக்கொடுக்கும்போது அவர் பல கசப்பான அனுபவங்களைப் பெறுவதை இது அடையாளப்படுத்தலாம். உண்மையில், அவருடைய ஊழியம் முழுவதிலும் நிரூபிக்கப்பட்டு. தம்முடைய பிதாவின் மேலுள்ள விசுவாசத்தை முழுமையாக செயலாற்றியது. அதுபோல, கசப்பான அனுபவங்கள் நம்மைத் தாக்கினாலும், நாம் தேவன் பேரிலுள்ள விசுவாசத்தை உண்மையாகச் செயல்படுத்த வேண்டும். "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும்: என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்" (யோபு 13:15). தேவ தூஷணம் சொன்னதாகக் குற்றஞ்சாட்டி அவமானப்படுத்தி, இரக்கமற்று, சிலுவையில் அறையப்படுவதையும் இயேசு மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டார். மனுஷருக்கு ஈடுபலியைக்கொடுக்க வேண்டுமென்ற அவருடைய குறிக்கோளிலிருந்து அவர் என்றுமே பின்வாங்கவில்லை. இயேசு அவருடைய தந்தையை என்றுமே சந்தேகிக்கவே இல்லை. இந்தச் சாம்பிராணி பரிபூரண அன்பை அடையாளப்படுத்துவதாகக் கருதப்படுகிறது - இயேசுவின் மனப்பூர்வமான பலி. அதுபோல நம்முடைய சகோதரர்களுக்கு நாம் பலிசெலுத்துவதற்கு எந்தளவுக்கு மனப்பூர்வமாக ஒப்புகொடுக்கிறோமோ, அந்தளவுக்கு நம்முடைய அன்பு பூரணப்படும். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:16).

கிறிஸ்துவிக்குள்ளான ஒரு சகோதரர் இன்னொருவரை முதன்முதலில் சந்தித்தப்போது,

"Are you a brother in the head or in the heart? " என்று வினவினார். அது ஒரு ஆற்றல் மிக்க கேள்வியாகும். இந்த வரிசையில் நாம் நம்மைச் சோதித்து அறிவது மிக அவசியம்.

- நாம் நம் சகோதரர்களோடு தொடர்புகொள்ளும் பொழுது, தேவனுடைய சத்தியத்தை நம் அறிவு திறமைக்கொண்டு ஆய்வு செய்கிறோமா?
- சத்தியத்தினிமித்தம் நாம் கூறும் மறுமொழியில் நம் எதிராளியை மலைக்கச் செய்து அதில் தனிப்பட்ட முறையில் நாம் மனநிறைவு கொள்கிறோமா?
- அல்லது கிறிஸ்துவின் பரிவையும் ஞானத்தையும் ஆழமாய் உணர்ந்தவர்களாய், வெறுக்கத்தக்க பாவிகளுக்குக்கூட தகுந்த சூழ்நிலையில் ஆயிரம் வருட இராஜ்யத்தைப்பற்றியும், தேவனைப்பற்றியும் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் கிடைக்குமென்று சிந்திக்கின்றோமா?
- நாம் நம் சகோதரனுடன் ஆழமான தோழமைக்கொண்டு அவர்கள் இந்த உலகத்தை வெற்றிக்கொள்ள உதவிசெய்கின்றோமா?

**நம் ஆவிக்குரிய புலனாகிய பகுத்தறிவைக் கூர்மையாக்குதல்**

நம் ஆவிக்குரிய புலனாகிய நுகரும் தன்மையைக் கூர்மையாக்கி, நம் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வில் நாம் சரியானப் பாதையில்தான் செல்கிறோமா என்று நாம் ஆராய்ந்திருக்கிறோமா? இந்தக் கேள்விகளை மனதில்கொண்டு நாம் முன்னேறிச் செல்லலாம்.

(1)முதலாவதாக இதுபோன்ற நடவடிக்கைகளில் நான் என்னை ஏன் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்? இதற்கான பதில் சுயநல மிக்க ஒன்றாய் இருந்து, அதில் எந்தவொரு தனிப்பட்ட ஆவிக்குரிய நோக்கமும் இல்லாதிருந்தால் நாம் மீண்டும் பரிசிலிக்க வேண்டும். பிறருடைய பொறுப்புக்களாகிய பாரங்களைச் சுமக்க உதவி செய்வதையே தோழமை என்று கூறலாம் (கலாத்தியர் 6:5). மற்றவர்கள் நம்மைச் சார்ந்துள்ளார்கள் என்று அறிந்திருந்தால் நாம் மிகவும் ஈடுபாடு உள்ளவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் மாறிவிடுவோம். நாம் யாராய் இருக்கிறோமோ, அது நமக்கு மட்டுமே பயனளிப்பதாய் இருந்தால் அதை நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

(2) நாம் நம்பும் சில தனிப்பட்ட கொள்கைகள் இந்தச் சில முக்கியமான செயல்களோடு இசைவாய் உள்ளதா? நாம் செய்யும் இந்தச் செயல்கள், நம் நம்பிக்கை, நடைமுறைகள் அல்லது கொள்கைகளுக்கு முரண்பாடாக இருந்தால், நாம் செய்யும் அந்தச் செயல்கள் ஆவிக்குரிய விதத்தில் நமக்குப் பயனளிக்காது (யாக்கோபு 4:17).

(3) இந்தச் செயல்களில் நான் ஈடுபடுவதால், என் வாழ்வின் முக்கியமான நோக்கங்களாகிய, எடுத்துகாட்டாக, திட்டமிடுதல், செலவுகள், என் குடும்பத்தின் நேரத்தைப் பலி செலுத்துதல் போன்ற காரியங்கள் முழுமையாகின்றதா? நம்முடைய பலிகள் மிகச் சிறந்ததாக இருந்தால், நாம் நம் சுமையைக் குறைத்து கடமையை சரிவர செய்வதில் ஆர்வம் காட்ட வேண்டும் (1சாமுயேல் 15:22).

(4) இந்தச் செயல்களை நிறைவேற்ற உங்களுக்கு இப்பொழுது அறிவும் திறமையும் இருக்கிறதா? அவ்வாறு இல்லையெனில், அந்தச் செயல் நிறைவுறும் வரை அதனைக்குறித்து, ஆராய்ச்சி செய்து, கற்று அதை நடைமுறைப்படுத்துவதில் உங்களிடம் நேரம் உள்ளதா? (லூக்கா 14:28).

(5) இந்தச் செயலை செய்யப் போகிறோம் என்ற அந்த எண்ணம் நம் மனதை மகிழ்ச்சியாலும், எதிர்நோக்குதலிலும் நிரம்புகிறதா? இல்லையென்றால் ஏன் இல்லை? (ரோமர் 12:11).

(6) இந்தச் செயல்கள் நாம் அக்கறை கொண்டவர் மீது ஆவிக்குரிய வாழ்வில் ஒரு மேம்பட்ட மாற்றத்தை உண்டாக்குமா? (எபிரெயர் 6:10).

(7) உங்கள் சிந்தையில் ஏதோ ஒரு சிறிய குரல் நீங்கள் தவறானப் பாதையில் செல்கிறீர்கள் என்று கூறுகிறதா? இந்தக் குரலுக்குச் செவி கொடுங்கள். ஏனெனில் ஏதோ தவறு என்ற நம் ஆவிக்குரிய புலனாகிய நுகர்தல் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. மீண்டும் முதலாம் கேள்விக்கு செல்வோம் (கலாத்தியர் 5:13).

நெருக்கம்

# தொடுதல்



Matt Kerry

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக் கொள்வீர்களாக" (உபாகமம் 13:4).

நாம் தேவனை எவ்வாறு பற்றிக்கொள்வது? மோசே இஸ்ரயேலரை எச்சரித்தபோது, நமக்கு ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கிறார். தேவனைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளைக் கடைப்பிடித்து அவருடைய குரலுக்குச் செவிகொடுத்து, அவரைச் சேவிக்கும்படிச் சொன்னார். இந்தக் கற்பனைகளோடு, இஸ்ரயேல் ஜனங்கள் உரைக்க முடியாத ஒரு மனரீதியான தொடர்பைத் தேவனோடு ஏற்படுத்திக்கொள்ள மோசே அவர்களிடம் மன்றாடினார். அவரைப் பற்றிக்கொள்ளும்படி கூறினார். தேவனைத் தங்களுடைய சிந்தையினால் எட்டிப்பிடிக்கும்படிக் கூறினார்.

"புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம்விட்டுப் போங்கள்; **அசுத்தமானதைத் தொடாதிருங்கள்**; கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்" (ஏசாயா 52:11) என்று தீர்க்கதரிசியாகிய ஏசாயா எச்சரித்திருக்கிறார். உடல் ரீதியாக எதையாகிலும் தொடுவது, ஒரு விசேஷித்தத் தொடர்பை ஏற்படுத்துவதுபோல, ஆவிக்குரிய ரீதியாக தொடுவதும் ஒரு விசேஷித்த உறவை ஏற்படுத்தும்.

பொய் விக்கிரகங்களை ஆராதிக்கும் புறஜாதிகளோடுத் தொடர்பு வைக்கக்கூடாது என்று ஏசாயா தீர்க்கதரிசி இஸ்ரயேலர்களை எச்சரித்தார். பொய்யான விக்கிரகத்தைத் தொட்டாலே பாவமா? மற்ற ஜனங்களின் ஆன்மீக பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகளிடமிருந்து பிரிந்து வாழ்வது அவர்கள் அசுத்தமானக் காரியங்கள் மீது பற்றுக்கொள்ளாத வழியில் நடத்தும். "நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக் கிறேன்" (யாத்திராகமம் 20:5).

**தொடுதல் மற்றும் தொடாமை (தீண்டாமை)**

"அசுத்தமானப் பொருட்களைத் தொடாமலிருக்க வேண்டும்" அதே நேரத்தில் பரலோகக் காரியங்களைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று ஆவிக்குரிய எச்சரிப்புக் கொடுக்கப்படுகிறது. நாம் பரலோகக் காரியங்களை இறுகப்பற்றிக்கொண்டு, அவைகளை நம் அருகில் கொண்டுவர வேண்டும். நம்முடைய மற்ற நான்கு புலன்களை நாம் பயன்படுத்துவதைப்போல, ஒரு பொருளை எட்டித் தொடும்போது அந்தப் பொருளைப்பற்றி நமக்கு ஒரு உள்ளார்ந்த புரிந்துகொள்ளுதலைப் பெறுகிறோம். நாம் தொடக்கூடிய எந்தக் காரியத்தோடு நாம் "ஒன்றித்துவிட" தொடுணர்வு ஒரு வாயிலாக உள்ளது. தொடுதல் பிணைப்புகளை (உறவுகள்) உண்டுபண்ணும் தொடாமை இடைவெளியை அதிகரிக்கும்.

பல சூழல்களில் வாடிக்கையாளர்கள் ஒரு பொருளைத் தொட்டுப்பார்த்தப்பின் வாங்குவது நிச்சயம் என்று ஆராய்ச்சிகள் காட்டுகிறது. இப்படியாக, "சோதனை ஓட்டம்" என்ற வார்த்தை வழக்கத்தில் வந்தது. ஆகவே வாகனங்கள் வாங்கக்கூடியவர்கள் அதை ஓட்டிப்பார்க்கும்போது கிடைக்கக்கூடிய நிறைவே அதை வாங்குவதற்குத் தூண்டும். வெறும் பார்வையால் ஏற்படுத்த முடியாத ஒரு மனரீதியான பந்தத்தைத் தொடுதல் ஏற்படுத்துகிறது. ஒருவர் நாய்குட்டி வாங்க கடைக்குச் செல்லும்போது, விற்கக்கூடியவர்கள், வாங்குபவரை கவருவதற்கு, அவருடைய கைகளில் நாய்குட்டியைத் தந்து அதன் ரோமத்தைக் கைகளினால் தொட வைக்கும்போது, அந்த உணர்வு அவர்களை அந்த நாய்குட்டியை வாங்கும் எண்ணத்தைத் தூண்ட நம்முடைய தொடுணர்வு மனரீதியான பந்தத்தை நாம் தொடும் பொருட்களோடு உருவாக்கி ஊக்குவிக்கக்கூடியதாக இருக்கிறது.

உடல் ரீதியாகத் தொடுவதைக்குறித்து, தேவனுடைய முதல் பிரமாணத்தை, ஏவாள் சர்ப்பத்திடம் பேசும்போது மீண்டும் நினைவுகூரப் பட்டது. "ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற

விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்" (ஆதியாகமம் 3:3). பழத்தைப் புசிப்பது பாவமாக இருக்கும்போது அதைத் தொடவும் வேண்டாமென்று ஏவாள் ஏன் எச்சரிக்கப்பட்டாள்? இதற்கான பதில் எளிதானது. பழத்தைக் கையில் தொட்டால், உணர்ச்சிப்பூர்வமானத் தொடர்பு ஏற்படும். இதுவரையில் ஏவாளுக்குப் பழக்கமில்லாததும் தன்னை எளிதாகக் கட்டுப்படுத்த முடியாதளவுக்குப் பாவத்தில் விழச்செய்யும் உறுதியான விருப்பமும், அதைக்குறித்து அறிந்துகொள்ளக்கூடிய ஆர்வமும் வளர்ச்சியடைந்திருக்கும்.

### தேவன் மற்றும் நம்முடைய சகோதரர்களையும் அன்புகூருதல்

"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்" (மத்தேயு 22:37). நம்முடைய அன்பைப் பொய்யான விக்கிரகங்கள் மற்றும் இந்த உலகத்தைவிட்டுப் பிரித்து, தேவன்மேல் மட்டுமே நிரந்தரமாக இருக்கும்படி அவர் விரும்புகிறார். நாம் நம்முடைய ஆண்டவர்மேல் கொண்ட விருப்பத்தை மையப்படுத்தி மனப்பூர்வமாக இதைச் செய்கிறோம். நம்முடைய சிந்தைகளையும், கிரியைகளையும், பேசக்கூடியவைகளிலும், செல்லக்கூடிய இடங்களிலும், பார்க்கக்கூடிய ஜனங்களிடமும், தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றப்படி வழிநடத்த வேண்டும்.

"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக் கொண்டிருங்கள்" (ரோமர் 12:9). மாயமற்ற அன்பின் வல்லமையைக் குறித்தும் அதன் ஆற்றல் நன்மைக்கு ஏதுவானது என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் அறிந்திருந்தார். நன்மையை உறுதியாகப் பற்றிக்கொண்டு அதை விரும்பும்படி பவுல் கூறுகிறார். தர்சு பட்டணத்தானாகிய சவுல், தன்னுடைய சிந்தையில் தீமைகளை உறுதியாகப் பற்றிக்கொண்டதன் விளைவுகளாகிய, எதிர்மறையான அனுபவங்களைப் பெற்றார். தீமையைச் செய்வதன் அனுபவங்களின் வாயிலாக, நன்மையை உறுதியாகப் பற்றிக்கொள்வதன் விளைவாக வரும் பலன்களைப்பற்றி கற்றுக் கொண்டார். அவருடைய தோல்விகள் மற்றும் காலபோக்கில் அவர் அடைந்த வெற்றிகளிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

அன்பை உறுதியாகப் பற்றிக்கொண்டு, தீமையைத் தொடாமலிருப்பதினால், நாம் மாயமற்ற அன்பை சிருஷ்டித்துத் தீமையை வெறுத்துவிடலாம். நம்முடைய ஆவிக்குரிய தொடுணர்வு இரண்டு வழிகளிலும் தூண்டிவிடப்படலாம். நாம் தொடர்ந்து எப்போதும் நன்மைக்குச் சாதகமாகவே விரும்ப வேண்டும். இதில் நாம் வெற்றி பெற்றால் நம்முடைய சிந்தையிலும், இருதயத்திலும் எந்த மனுஷனும் உடைக்க முடியாதபடிக்கு நம்முடைய ஆண்டவரோடு உறுதியான ஒரு பந்தத்தை ஏற்படுத்தலாம். "அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்" (ரோமர் 8:5).

நம்முடைய சிந்தைகளில் எந்தெந்தக் காரியங்களைத் **தொடலாம்**? நம்முடைய சிந்தைகளில் எந்தெந்தக் காரியங்களை நாம் **பற்றிக்கொள்ளலாம்**? ஒரு தீமையானக் காரியத்தை நம்முடைய சிந்தையில் தொடவேண்டுமானால், மனரீதியாக அறிந்துகொள்ளும் ஓர் ஆர்வத்தைத் திருப்தியாக்கும்படிக்கு அதனோடு தொடர்பை முதலில் ஏற்படுத்தத் துவக்கும்.

நாம் கவனிக்காதபோது, இந்த உலகத்தின் கவலைகள் நம்மை மேற்கொண்டுவிடும். அப்போஸ்தலனாகிய பவுலின் எச்சரிப்புகளைக் குறித்து வாசிக்கலாம். "அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலிப்பியர் 3:19). இந்த விளிம்பிற்கு நாம் வருவதற்கு நாம் எவ்வளவு பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறோம்? இராஜாவாகிய தாவீது தன்னுடைய இருதயத்தில் தேவனிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகி உரியாவைக் கொன்றுப் போடுவதற்கான கட்டளையைக் கொடுக்கும்படிக்கு இந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

இராஜாவாகிய தாவீது, உடனடியாகப் பாவத்தில் விழவில்லை. அவருடைய மாம்சத்தின் இச்சைகள் - அவர் கண்டது, அவர் கேட்டது மற்றும் அவர் உணர்ந்தது - அவரைத் தேவனைவிட்டு வெகுதூரம் இழுத்துச்சென்றது. ஆர்வத்தைத் தூண்டும் இனிமையான மாம்ச விருப்பங்கள் துவக்கத்தில் காணப்பட்டாலும், ஒரு தீமையான

சிந்தையை நாம் தொடும்போது, தேவனைவிட்டுப் பிரிந்து செல்லக்கூடியப் பாதையில் நடத்திச் செல்லக்கூடியவர்களாக இருக்கிறோம். இந்த உலகத்தின்மேல் அல்லது மாம்சத்தில் ஒரு வலுவற்ற ஆர்வமாக இருந்தாலும், அது நம்முடைய சிந்தையில் வேர்கொள்ளுமேயானால், அது நம்மை மிகுந்த அபாயத்திற்கு நம்மைத் திருப்பிவிடும். நம்முடைய மனதுக்குள் இருக்கும் ஆழமான விருப்பங்கள் எப்போதும் கவனித்திருக்குபடிக்கு யாக்கோபு கூறுகிறார். "உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" (யாக்கோபு 4: 1-8).

### எச்சரிப்புகள்

"உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத்தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்" (மத்தேயு 5:29, 30). நாம் பாவம் செய்வதற்குக் காரணமாக இருக்கும், நம்முடைய சரீரத்தின் எந்த அவயவத்தையும், மனதின் எந்த சிந்தையையும் பயன்படுத்த வேண்டாமென்று இயேசு கூறுகிறார்.

"நீங்கள் இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணாமல், அவர்கள் பலிபீடங்களை இடித்துவிடக்கடவீர்கள் என்றும் சொன்னேன்; ஆனாலும் என் சொல்லைக் கேளாதேபோனீர்கள். ஏன் இப்படிச் செய்தீர்கள்? ஆகையால் நான் அவர்களை உங்கள் முகத்திற்கு முன்பாகத் துரத்துவதில்லை என்றேன்; அவர்கள் உங்களை நெருக்குவார்கள்; அவர்களுடைய தேவர்கள் உங்களுக்குக் கண்ணியாவார்கள்" (நியாயாதிபதிகள் 2:2-3) என்று தேவன் இஸ்ரயேலரிடம் கூறினார். இந்தச் செய்தியை இஸ்ரயேலர்கள் செவிகொடாமல், சோதனையின் பாதையில் தங்களைத் தாங்களே நடத்திகொண்டனர். ஆகவே, பல வருடங்களாகப் பொய்யான விக்கிரகங்களோடு அவர்கள் போராடினார்கள். இந்தப் பாவத்தினிமித்தமாக தேவன் அவர்களுடைய இராஜ்யத்தை வடதேசம் மற்றும் தென்தேசம் என்று பிரித்துவிட்டார்.

இந்த ஒரு கவனக்குறைவானது, காலபோக்கில் அவர்களை உடல்ரீதியான சிறைப் பிடித்தலுக்கு வழிநடத்தியது. இவர்கள் முன்னதாக மனரீதியான சிறைப்பிடித்தலை தேர்வு செய்துகொண்டதை இது வெளிப்படுத்தியது. (1 இராஜாக்கள் 11:31-33; 2 இராஜாக்கள் 23:26, 27; 21:10).

நாம்மற்றவர்களின்கருத்துக்களைக்கொண்டு நம்முடைய வெற்றியை அளவிட்டாலும் சரி அல்லது நம்முடைய நாட்களில் நம்மைச் சோதனைக்கு உட்படுத்தும் கேடானக் காரியங்களான தொலைக்காட்சி காரணமில்லாத கடைவீதி பயணம், பூமிக்குரிய ஐசுவரித்தின்மேல் விருப்பம், இணையதளம் போன்ற காரியங்களானாலும் சரி நிச்சயமாக நாம இவைகளுக்கு இரையாகிவிடுவோம். இந்தச்சோதனைகளைத்தொடும்போது, தேவனைவிட்டு நம்மைப் பிரித்துச்செல்வதற்கு ஒரு பிளவு துவங்கும். "பூமியிலேஉங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்" (மத்தேயு 6:19-33).

### இயேசுவைத் தொடுதல்

பன்னிரண்டு வருடங்கள் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீக்கு, இயேசுவைக் கண்டு, அவருடைய உபதேசங்களைக் கேட்பது மட்டும் போதுமானதாக இல்லை. அவளுடைய சிந்தையில் அவருக்கு அருகில் செல்ல வேண்டுமென்று விரும்பி - அவருடைய வஸ்திரத்தைத் தொடுமளவுக்கு அவர் அருகில் சென்றாள். அவருடைய வஸ்திரத்தைத் தொட்ட மாத்திரத்தில் அவளுடைய மிகப் பெரிய பிரச்சனை தீர்ந்துவிடும் என்பதை அவள் அறிந்திருந்தாள். "நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் **தொட்டாள்**" (மத்தேயு 9:21).

மெய்யாகவே இதுதான் நம்முடைய விருப்பமாகவும் இருக்க வேண்டும். இதுவரை இந்த உலகம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், கிறிஸ்துவைப் பற்றிக்கொள்வதே எல்லா தேசத்தின் விருப்பம். ஆவிக்குரிய விதத்தில் நாம் தேவனை தடவித் தேடி கண்டுபிடிக்கும் வரையில், அவர் நாம் எட்டிபிடிக்கும் தூரத்தில் அவர் இருப்பதில்லை என்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக் கற்பிக்கிறார். உண்மையான முயற்சிகளும், மனப்பூர்வமாக ஏறெடுக்கும் ஜெபங்களும் நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய மனதளவில் நாம் அவரிடம் சேரலாம். "கர்த்தராகிய தம்மை அவர்கள் **தடவியாகிலும்** கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத்

தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" (அப்போஸ்தலர் 17:27).

**நம்முடைய பாசம்**

நாம் தேவனுக்கென்று முறிக்கப்படாத அன்பை ஆழமாக ஸ்தாபித்து, நம்முடைய சிந்தையில் அவர்மேல் வைத்திருக்கும் அன்பை மையமாகக்கொண்டு அவரை நோக்கிச் செல்ல முயற்சிக்கும் போது நம்முடைய ஆவிக்குரிய தொடுணர்வு சரியாக இயக்கப்படுகிறது. நம்முடைய வாழ்க்கையில், தேவனுடைய வாக்குத்தத்தங்களை உறுதியாக விசுவாசித்து, அவைகளை நம்முடைய இருதயத்தின் பொக்கிஷங்களாகப் பற்றிக்கொள்ள வேண்டும். "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் **பற்றிக்கொள்**; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்" (1 தீமோத்தேயு 6:12, 14).

நம்முடைய இருதயத்தில் நேசிக்கக்கூடிய காரியங்கள் நாம் வாழக்கூடிய வாழ்க்கையில் வெளிப்படும். நம்முடைய இருதயத்தின் விருப்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு இந்தக் கோட்பாட்டைப் பயன்படுத்துவது நமக்கு மிகச் சுலபமாக இருக்கும். இப்படிச் செய்வதற்கு நாம் நம்முடைய நேரத்தை எப்படிச் செலவழித்தோமென்று நம்மைநாமே கேட்டுக்கொள்ளலாம். அதாவது நம்முடைய நேரத்தை எப்படிச் செலவழிக்க வேண்டுமென்ற நம்முடைய விருப்பத்தையல்ல, மாறாக நேற்று நம்முடைய சாயங்காலத்தை எப்படிச் செலவழித்தோம்? மற்றும் கடைசி வியாழக்கிழமை அன்று நேரத்தை எப்படிச் செலவழித்தோம்? இவைகளுக்கான நம்முடைய பதில்களை நம்முடைய இருதயத்தின் உண்மையான விருப்பத்தை வெளிப்படுத்தும்.

நம்முடைய சிந்தைகள் பரலோகக் காரியங்கள்மேல் தங்கியிருக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். "தங்கி" என்ற வார்த்தைக்குக் கொடுக்கப்படும் கிரேக்க வார்த்தைக்கு "கையிருப்பில் உள்ளவைகளின் பட்டியல்" என்று பொருள் (ஸ்டிராங்க்ஸ் - 3049)(பிலிப்பியர் 4:8). வணிகத்தில் ஒரு ஆற்றல்மிக்க விளக்க விவர பட்டியல் நீளமாகவும் அதேநேரத்தில் மிக உண்ணிப்பாகவும் கவனிக்கப்படுவதைப்போல நம்முடைய சிந்தையின் ஆற்றல்மிக்க விளக்க விவர பட்டியலும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் சரியானப் பலனைக் கொடுப்பதற்குக் கவனமாக இருக்க வேண்டும்.

நாம் தேவனுடைய வார்த்தைகளை எவ்வாறு கீழ்ப்படிந்து தேவனை நாம் உறுதியாகப் பற்றிக்கொள்வதற்கு நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைச் சரியாக ஒழுங்குச் செய்வதற்கு மோசே ஒரு அழகான நடைமுறைக்குரிய விவரங்களைக்கொடுக்கிறார். "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக" (உபாகமம் 6:5-9).

நம்முடைய சிந்தையில் எதையாகிலும் நாம் எப்படி தொடுவது? நம்முடைய சிந்தைகளில் அதற்காக ஒரு இடத்தைக் கொடுத்து இதைச் செய்கிறோம். நம்முடைய இருதயத்தின் விருப்பத்தில் அதற்கான ஒரு ஆழமான பாசத்தை வைத்து அதை நாம் இறுகப் பற்றிக்கொள்கிறோம். ஆவிக்குரிய காரியங்களில் எதையாகிலும் தொடக்கூடிய காரியங்கள் நன்மை அல்லது தீமையை விளைவிக்கலாம். நம்மை தேவனிடமாக அழைத்துச் செல்லும் அல்லது அவரிடமிருந்து இழுத்துச் செல்லும். நாம்தான் தீர்மானிக்க வேண்டும். அதன் விளைவு நம்முடைய தீர்மானத்தையே சார்ந்துள்ளது.

"அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியா யிருக்கக்கடவோம்; வாக்குத்தத் தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. "
(எபிரெயர் 10:23).



Benjamin Stein

# சுவை

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 34:8).

அலசி சுத்தம் செய்யப்பட்ட ஒரு ஸ்டிராபெரியை (Strawberry) உங்கள் கையில் வைத்திருப்பதாகச் சற்று கற்பனை செய்யுங்கள். அதன் கருஞ்சிவப்பு நிறமும், சதைப் பற்றுள்ள கனியும் எவ்வளவு நேர்த்தியாக உள்ளது. ஒரு தண்ணீர்த்துளி அதின்மேலிருந்து மெதுவாக வடிவதை நீங்கள் காண்கிறீர்கள். அதை உங்கள் உதடுகளினருகில் கொண்டுவந்து சுவைக்கும்போது, அந்த மதுரமானச் சுவை நம் வாயை நிறைத்தவுடன் முழுமையாக அந்தக் கனி தீரும்வரையில் அதைப் புசிக்க நாம் கட்டாயப்படுத்தப்படுகிறோம்.

இந்த முதல் பத்தியைப் படித்தவுடன் உங்கள் நாவில் காணப்படும் ருசி மொட்டுகள் ஸ்டிரா பெரியைப் புசிப்பதற்கு ஆயத்தமாகியிருந்தால், சுவைக்கக்கூடிய உணர்வு எவ்வளவு வல்லமை உள்ளதென்று நீங்கள் உணரலாம்! எதிர்பார்ப்புக்குப்பின் ஒரு உணவைச் சுவைத்தால், அதன் சுவை நம்முடைய ஞாபகத்தில் பதிந்துவிடுகிறது. நாம் அனுபவிக்கக்கூடிய ஒவ்வொரு சுவையும் நம்முடைய நூலகமாகிய ஞாபகத்தில் சேர்க்கப்படுகிறது. அந்த உணர்வுகள் நம்மை நடத்துகிறது. மேலும் அதனால் தொடர்ந்து நம்முடைய வாழ்க்கையை நாம் சுத்திகரிக்கிறோம்.

தீமையான சுவைகளைத் தவிர்ப்பதற்கு நம்முடைய சுவைகளின் நூலகம் உதவி செய்கிறது. அதிகமான உப்பைக்கொண்டிருக்கும் உணவை நாம் புறக்கணிக்கலாம், மதுரமான ஆரஞ்சு பழத்தை எதிர்பார்க்கையில் கசப்பான எலும்பிச்சையை நாம் தவிர்க்கலாம்.

### சுவை அனுபவத்திற்குச் சமம்

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்" என்று தாவீது இராஜா கூறுகையில், தேவனுடைய வழிநடத்துதலையும், இரக்கத்தையும் அன்பையும், அனுபவித்ததை அவர் குறிப்பிட்டார். தேவன் மேலுள்ள விசுவாசத்தை அவருடைய மனதில் மறக்க முடியாத பதிப்பையும் ஒரு விலையேறபெற்ற உணர்வையும் ஏற்படுத்திய ஒரு அருமையான சுவையாக தாவீது விவரிக்கிறார். தேவனுடைய இரக்கம் மற்றும் அன்பான பரிவும் தாவீதுக்கு அதிகமாகத் தேவைப்பட்டது. அவர் தம்முடைய **ஆவிக்குரிய சுவையின்** ஞாபகத்திலிருந்து நமக்கு இந்த அறிவுரையைக் கொடுத்தார். மற்றும் நாம் தேவனை நம்பிக்கையாகக் கொண்டிருந்தால் நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம் என்று அவர் வாக்களித்திருக்கிறார்.

இராஜாவாகிய தாவீதின் இறுதி காலத்தில், தேவனுடைய நன்மைகளைப் பற்றியும், தேவனை விட்டுச்செல்லும்போது தீமையின் ஆற்றலைக் குறித்தும் தம்முடைய குமாரனாகிய சாலொமோனுக்கு ஆலோசனைக் கூறினார். "என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்" (1 நாளாகமம் 28:9).

வெகு நாட்களுக்குபின், இதுபோல ஒரு அறிவுரையை சாலொமோன் தம்முடைய ஞானத்திலிருந்தும் ருசித்து அனுபவத்திலிருந்தும் கூறினார், "நீ ஒரு அதிபதியோடே போஜனம் பண்ண உட்கார்ந்தால், உனக்கு முன்பாக இருக்கிறதை நன்றாய்க் கவனித்துப்பார். நீ போஜனப்பிரியனாயிருந்தால், உன் தொண்டையிலே கத்தியை வை. அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே; அவைகள் கள்ளப்போஜனமாமே" (நீதிமொழிகள் 23:1-3). மாம்சத்தின் சோதனைகளையும் அசுத்தமான அனுபவங்களையும் விவரிக்க, சாலொமோன் இராஜா ருசியுள்ள பதார்த்தங்களைச் சுவைக்கு உருவகப்படுத்துகிறார்.

ஒவ்வொரு முறையும் நாம் பெறக்கூடிய அனுபவங்கள், தனிப்பட்ட முறையிலோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியிலோ அல்லது தேவனை விட்டுச்செல்வதற்கான வாய்ப்பாகவோ உள்ளது. இராஜாவாகிய தாவீதின் ஞானம் மற்றும் சாலொமோனின் எச்சரிப்பை நாம் பின்பற்றி, நம்முடைய வாய்ப்புகளின் சிறப்பியல்புகளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். பார்வைக்குச் சதைப்பற்றுள்ள

பழம் அல்லது ருசியுள்ள பதார்த்தம் உண்மையில் நம்மைத் திசைத் திருப்பக்கூடியதாகவும் அல்லது தீங்கு விளைவிக்கக்கூடியதாகவும் இருக்கலாம்.

### அப்போஸ்தலராகிய பவுல்

இயேசுவின் மரணத்தின் அனுபவத்தை விவரிப்பதற்கு அப்போஸ்தலராகிய பவுல் **சுவையை** உருவகமாகப் பயன்படுத்துகிறார். "என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்" (எபிரெயர் 2:9).

முழு மனுக்குலத்திற்கும் ஈடுபலியாக, இயேசு மரணத்தை ருசிப்பார்த்த அனுபவம் மனித இனம் முழுவதற்கும் மிக முக்கியமான ஒரு சம்பவமானது. அந்த நொடியில் இந்த முழு மனுக்குலத்தையும், ஆதாமின் மரணமாகிய கசப்பான சாபத்திலிருந்து இயேசு இரட்சித்தார். "(geuomai)" என்ற கிரேக்க வார்த்தை (Strongs #1089) "ருசித்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு "உணருதல், சோதனை, அனுபங்கள்" என்று பொருள்படும். இயேசு அதை உணர்ந்து அனைவருக்காகவும் மரணத்தை அனுபவித்தார் (ருசி பார்த்தார்). ஆனால் இயேசு இன்னும் அதிகமான காரியங்களைச் செய்தார். ஒரு பரிபூரண மனுஷனாக அவர் பாடுபட்டார். உபத்திரவத்தையும் வேதனையையும் ருசிபார்த்தார். நாம் கற்பனைச் செய்ய மடியாத அளவுக்கு பாவத்தின் கொடூரத்தை அவர் அனுபவித்தார்.

நமக்காக இவ்வனைத்தையும் அனுபவித்த இயேசு, நமக்காகப் பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியரானார் (எபிரெயர் 4:14-15). நாம் இயேசுவைப் பின்பற்றினால் நாமும் அதே உபத்திரவங்களையும் தேவனைகளையும், கொடூரங்களையும் மனப்பூர்வமாக ருசிப்பதற்கு முன்வர வேண்டும். இதுபோன்ற அனுபவங்களில் தேவனுடைய திட்டத்தில், தீமையின் அனுபவத்தினால் ஏற்படும் இறுதியான நன்மைகளையும் அனைவருக்கான ஈடுபலியில் புரிந்துகொள்ள முடியும். இந்தக் கோணத்தில் ஒரு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக இருந்தால் மட்டுமே கர்த்தர் நல்லவர் என்பதை நாம் உண்மையில் ருசிப்பார்க்க முடியும்.

### அப்போஸ்தலராகிய பேதுரு

நம்முடைய கிறிஸ்துவ நடையின் துவக்கத்தில் தேவனுடைய மென்மையான தொடுதலை அதாவது தேவனோடு நம்முடைய அனுபவத்தை விவரிப்பதற்கு, அப்போஸ்தலனாகிய பேதுரு உருவகமாக பாலை **சுவையோட** இணைத்திருக்கிறார். "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:2-3). "என்னுடைய ஆடுகளை மேய்ப்பாயாக" என்று இயேசு பேதுருவிடம் முன்னதாகச் சொன்ன வார்த்தைகள் ஒருவேளை தேவனுடைய வார்த்தையாகிய பாலின் மேல் வாஞ்சையாக இருந்து, தேவனுடைய கிருபையை ருசிப்பதற்கான இந்த ஆலோசனைக்குக் காரணமாக இருந்திருக்கலாம். அதைத்தொடர்ந்து அப்போஸ்தலனாகிய பேதுரு தேவனுடைய வார்த்தையாகிய பாலான ஆகாரத்தையும், பலமான ஆகாரத்தையும், பெந்தெகொஸ்தே நாளில் யூதர்களுக்கும், அதற்குப் பின் புறஜாதிகளுக்கும் (முதல் புறஜாதி - கொர்நேலியு) அதற்குப் பின் தன் ஜீவிய நாட்கள் முழுவதும் சபையைப் போஷித்தார்.

நம்முடைய ஐம்புலன்களில் **சுவை** கடைசியாக இருப்பதுபோல, ஆவிக்குரிய ஐம்புலன்களில் நம்முடைய பரலோகப் பிதாவிடம் சென்று, அவர் கொடுக்கும் ஆவிக்குரிய உணவை உண்டுமகிழும் அனுபவம் இறுதியானது.

### கற்றுக்கொள்ளக்கூடிய நான்கு முறைகள்

ஆய்தல், படித்தல், உள்ளுணர்வு மற்றும் அனுபவத்தினால் கற்றுக்கொள்கிறோம். அதில் அனுபவத்தினால் கற்றுக்கொள்வதே பயனுள்ளதும், நீடிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. பாவத்தின் மிகப் பெரிய பாடத்தை தேவனுடைய திட்டத்தில் மனுக்குலத்திற்குக் கற்றுக்கொடுப்பதற்கு அனுபவமே மையக் கல்லாக உள்ளது. பாவத்தின் அனுபவத்தின் வழியாகக் கீழ்ப்படிதலின் மதிப்பை மனுக்குலம் கற்றுக்கொள்வதற்காக தீமையின் அனுமதியே தேவனுடைய கூர்மதியுள்ள திட்டமாகும். அதிகமான உவர்ப்பையோ (உப்பு), கசக்கும் எலுமிச்சையையோ சுவைத்ததுபோல, இந்த 6000 வருடங்களாக மனுக்குலம் பாவத்தை ருசித்திருக்கிறார்கள். விரைவில் மிகக் கசப்பான அனுபவங்களை ருசிபார்ப்பதன் வழியாக தங்களுடைய பாடங்களை முழுமையாகக் கற்றுக்கொள்வார்கள்.

தேவன் மனிதனுக்குக் கீழ்ப்படிதலின் உண்மையான மதிப்பை ஆய்தல், படித்தல் அல்லது உள்ளுணர்வின் வழியாகக் கற்றுக்கொடுத்திருக்கக்கூடுமா? இல்லை என்பதே

பதிலாகும். தேவன் பாவத்தின் நிலையைக் கற்றுக்கொடுப்பதற்கு ஆயுஷ்விட்ஸ்(Auschwitz) மரண முகாம் யூதர்களின் அனுபவத்தை விவரிப்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவன் விவரிக்கும் பொல்லாப்பையும், ஜனங்களின் படுகொலையையும் கேள்விப்படும்பொழுது நமக்கு ஆழந்த துயரத்தை உண்டாக்குமே தவர, நடைமுறை விளைவுகள் உண்டாக்கும் விளைவுகளை அது உண்டாக்காது. யூதர்கள், ஆயுஷ்விட்ஸ் மரண முகாமில் அனுபவித்த பார்த்தல், கேட்டல், முகர்தல், உணர்ச்சிகள் மற்றும் சுவைகள் அனைத்தும் வெறும் உற்றுநோக்குதல், வாசித்தல் அல்லது உள்ளுணர்வுகள் மூலம் உணர முடியாது. இன்று அனுபவத்தின் வழியாகப் பாவத்தின் சுவை மனுக்குலத்தின் ஞாபகத்தில் பதிந்திருக்கிறது.

சுவையின் அனுபவத்தை விழுந்துபோன மனுக்குலத்தில் நூலகம் பயனுள்ள முறையில் வளர, அறிவிக்கப்படும் தகவல்கள் ஒரு வல்லமையான கருவியாய் இருக்காது. அக்கிரமத்தை வெறுக்கக்கூடிய அளவுக்கு மனுக்குலம் நீதியை நேசிப்பதற்கு ஒரு நிரந்தரமான அர்ப்பணிப்பை ஏற்படுத்தவதற்கு அனுபவமே கற்றுக்கொள்ளக்கூடிய ஒரே வழிமுறை என்று தேவனுடைய எல்லையற்ற ஞானத்தில் தீர்மானித்தார். ஆனால் பாவத்தின் அனுபவத்தின் வழியாகக் கற்றுக்கொள்வது கசப்பும் இனிப்புமாம் (bittersweet). இறுதியானப் பாடம் இனிமையாக இருந்தாலும், பாவத்தின் அனுபவங்கள் கசப்பாகவே இருக்கும். "அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" (சங்கீதம் 30:5).

### சுவைக்கக்கூடிய புலநுணர்வு

நம்முடைய சுவைக்கும்புலன் மிகவும் சிக்கலானது. இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, காரசாரமான ருசிகளை நம்முடைய சுவை மொட்டுகள் உணரமுடியும். இப்படியாகவே நம்முடைய ஆவிக்குரிய சுவையுணர்வு வேலை செய்கிறது. வேதாகமத்தின் செயல்பாடுகளை விவரிப்பதற்கு, "தேனைப்போல சுவையானது" மற்றும் "கசப்பு" என்ற உருவகங்களை உண்மையில் இயேசுவும் பயன்படுத்தினார் (வெளிப்படுத்தல் 10:9-10). தாவீது இராஜாவும், தேனைப் போற்றுவதற்கு நறுமணச்சுவையை உருவகமாகப் பயன்படுத்தினார். "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்" (சங்கீதம் 119:103). தேவனோடு நம்முடைய ஆவிக்குரிய ருசியுள்ள அனுபவம் மகிழ்ச்சியாகவும் பிரியமானதாகவும் உள்ளது. நம்முடைய வாழ்க்கையில் இவைகளை நிறைவாகப் பெற்றருக்கிறோம்.

ஒரு விவேகமுள்ள மற்றும் அன்பான பெற்றோர்கள் தங்கள் பிள்ளையின் வாழ்வு இறுதிவரை பயனுள்ளதாய் அமைய தேவையான அனுபவங்களை எவ்வாறு செல்படுத்துகிறார்களோ, அதுபோல தேவனும் நமக்கு இறுதிவரை பயன்பெரும்பொருட்டு நமக்குத் தேவையான அனுபவங்களைக் கொடுக்கிறார். நம்முடைய சில அனுபவங்கள் சுவையாகவும் (இனிப்பு), சில அனுபவங்கள் கசப்பாகவும் உள்ளது. இனிப்பு மற்றும் கசப்பான இரண்டு அனுபவங்கள் நம்மை தேவனிடம் நெருங்கச் செய்கிறது.

### சுவைக்கு பின்னிருக்கும் அறிவியல்

நம்முடைய வாயிலும், நாவிலும் சுமார் 30,000 ருசி மொட்டுகளோடு பிறந்தோம். நாம் சிறுவராக இருந்தபோது கசப்பு மற்றும் புளிப்புக்கு நம்முடைய சுவை மொட்டுகள் மிகவும் உணர்வுள்ளதாக இருந்தது. நாம் முதிர்ச்சியடையும்போது, நம்முடைய சில ருசி மொட்டுகளை இழந்துவிடுகிறோம். இதினிமித்தம் புளிப்பு மற்றும் கசப்பான உணர்வுகள் குறைந்துவிடுகிறது. ஆகவே நாம் வயதாகும் போது சகப்பையும் புளிப்பையும் எளிதாகச் சகிக்கமுடிகிறது.

நம்முடைய ஆவிக்குரிய அனுபவங்களின் உணர்வுகளும் இப்படியாகவே வளர்ச்சியடைகிறது. நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரும்போது, நம்முடைய துவக்கக் கால அனுபவங்கள் மிகவும் கசப்பாகத் தோன்றியது. ஆனால் நாம் வளர்ச்சியடையக்கூடிய கிறிஸ்துவ வாழ்க்கைக்கு அது மதிப்புள்ளதாக இருக்கிறது. நம்முடைய புது சிருஷ்டி வளர்ச்சியடையும்போது, சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதைக் கற்றுக்கொண்ட நாம், கசப்பான அனுபவங்களையும் ஏற்றுக்கொள்வதற்கு ஆற்றலைப் பெறுகிறோம். "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரிந்தியர் 10:13).

சில நேரங்களில் இனிப்பான சுவை நமக்குக் கேடுண்டாக்குகிறது. மாம்சத்தின் பல அனுபவங்கள் நமக்கு உண்டு. ஆனால் அவைகள் பாவமானது. நாம் வஞ்சிக்கப்பட்டதினால் மட்டுமே துவக்கத்தில் அந்தப் பாவத்தை நாம் நன்மையாக உணர்ந்து பங்கெடுக்க விரும்புகிறோம். ஒருமுறை நாம் அந்த அனுபவத்தைப் "புசித்து" அதனுடைய தாக்குதலை நம்முடைய வாழ்க்கையில் காணும்போது, நாம் நம்முடைய தவறை உணர்ந்து அதற்காக அவமானப்பட்டு, குற்ற உணர்வைப் பெறுவோம். "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதிமொழிகள் 16:25).

**ஆதாம் மற்றும் ஏவாள்**

தேவனுடைய நன்மைகளைக் குறித்து ஆதாம் மற்றும் ஏவாள் அறிந்திருந்தார்கள். அவர்களின் சகல தேவைகளும் சுயாதீனம் உள்பட ஏதேன் தோட்டத்தில் கொடுக்கப்பட்டது. தேவன் அவர்களுக்கு ஒரே கட்டளையைத் தந்திருந்தார் - "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மட்டும் புசிக்கவேண்டாம்" அந்தக் கனியின் முதல் சுவை - அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், தங்கள் மேலும் தங்களுடைய பிள்ளைகள்மேலும் சாபத்தை வருவித்துக்கொண்டனர். தடைவிதிக்கப்பட்ட கனியைப் புசிப்பது மிகச் சிறிய காரியமாகத் தோன்றினாலும், நம்முடைய அனுபவங்கள் ஒவ்வொன்றிலும், அதாவது அற்பாகத் தோன்றும் அனுபவங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. தேவனுடைய எல்லையற்ற ஞானத்தில், ஒவ்வொரு மனுஷருக்காக மரணத்தை ருசிபார்த்து ஆதாமின் சாபத்தை நீக்கும்படி அவர் இயேசுவை அனுப்பினார் (1 கொரிந்தியர் 15:22).

அருமையான ஸ்டிராபெரியைச் சுவைப்பதிலிருந்து நாம் என்னப் பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம்? நாம் தொடுவதற்கு முன்பாகவே, அனுபவமாகிய சுவையின் நூலகத்தைப் புரட்டிப்பார்க்கக் கற்றுக்கொள்கிறோம். ஆவிக்குரிய விதத்தில், நம்முடைய பரலோக பிதாவுக்குக் கீழ்ப்படிவதற்கு நம்முடைய சுத்திகரிப்பின் வல்லமையைக்கொண்டு நம்முடைய மாம்ச விருப்பங்களின் வல்லமையைப் புறக்கணிக்க வேண்டிய அவசியத்தைக் கற்றுகொண்டோம்.

இடுக்கமானப் பாதையில் நடக்கும்போது, நீதியை நிலையாக தேர்வு செய்வதற்கு உதவியாக இன்று பாவத்தின் அனுபவங்கள் நமக்குத் தேவைப்படுகிறது. தேவனுடைய இராஜ்யத்தில், மனுக்குலத்தின் ஒவ்வொரு தனிநபருக்கும், இப்படிப்பட்டதான அனுபவங்களே தேவைப்படும் ஆவிக்குரிய எரிபொருளாகக் கொடுக்கப்படும்." கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 34:8).

# சிரியா நாட்டவரின் குடியேற்றுதலால் ஏற்படும் நெருக்கடி

நான்கு வருடங்களாக தங்கள் தாய்நாட்டில் நடந்த உள்நாட்டு போர்களால் பாதிக்கப்பட்ட ஜனங்களுள், சுமார் 4.1 மில்லியன் சிரியா நாட்டினர், தங்கள் தாய் நாட்டை விட்டுத் தப்பி ஓடினர் என்கிறது ஐநா சபை. இந்தச் சமீபத்திய போர்தான் சூறையாடிய நாடுகளிலுருந்து ஜனங்களை மீண்டும் இடமாற்றம் செய்ய வைக்கிறது.

முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து (1914-1918) பாதுகாப்பைத் தேடி இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் சூறையாடப்பட்ட தாய்நாட்டை விட்டுத் தப்பி ஓடுகையில், 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முதல் அகதிகளுக்கான பயணப் பத்திரங்கள் வழங்குவதற்காக, அந்த அரசாங்கம் சர்வதேச அளவிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இரண்டாம் உலகப்போரின் போதும் (1939-1945) அதன் பிறகும் திடீரென்று அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் துவங்கியது, ஏனென்றால் பல இலட்சக் கணக்கான மக்கள் வலுக்கட்டாயமாக இடம் பெயர்க்கப்பட்டு, நாடுகடத்தப்பட்டு மற்றும் மீண்டும் குடியேற்றப்பட்டனர். இதற்குப் பதிலளிக்கும் விதமாக ஐநா சபை, 1951-ஆம் ஆண்டு ஒரு அகதிகள் கூட்டமைப்பு மற்றும் 1967-ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தமும் உருவாக்கியது. அதில் அகதிகளின் உரிமைகளும், மேற்கூறப்பட்ட இரு விண்ணப்பங்களில் 148 உறுபினர்களின் கடமைகளையும், அது தெளிவாகக் கூறியது. இப்பொழுது நடந்துக்கொண்டிருக்கும் இந்தச் சிரியா நாட்டினரின் குடியேற்ற நெருக்கடியால் இந்தக் கடமைகள் ஒரு பெரிய சுமையாய் மாறிவிட்டது.

ஐநா சபையின்படி, ஐரோப்பாவில் அகதிகளை ஏற்றுக்கொள்ளும் நாடுகள் இவைகளே :

- சிரியாவுடன் எல்லையைப் பகிர்ந்துக்கொள்ளும் துருக்கி ஏறக்குறைய பாதிப்பேரை ஏற்றுக்கொண்டது.
- லெபனான் 10 லட்சம் மக்களை ஏற்றுக்கொண்டது. இதனால் அவர்களின் ஜனத்தொகை 25% உயர்ந்தது.
- ஜோர்டான் 629,000 மக்களை ஏற்றுக்கொண்டது அதில் 20% முகாம்களில் வாழ்கின்றனர்.
- ISIS-இன் தாக்குதல்கள் இருந்தாலும் ஈராக்கு 249,000 மக்களை ஏற்றுக்கொண்டது .ISIS நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றி உள்ளனர்.
- எகிப்து 132,000 மக்களை ஏற்றக்கொண்டுள்ளது. இந்த அகதிகளுக்கு ஒரு புதிய வீட்டை உருவாக்க, Naguib Swiris என்ற கோடீஸ்வரர், கிரீக் அல்லது இத்தாலியின் ஒரு தீவை வாங்க முன்வந்துள்ளார்.

மேற்கூறப்பட்ட நாடுகளில் பல அகதிகள் புகுந்தாலும், ஏறத்தாழ 250,000 கோரிக்கைகள் புகலிடம் தேடி ஐரோப்பாவிற்கு இன்னும் வந்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அது பல வருடங்கள் ஆனாலும் நடைமுறைப்படுத்தப்படாது. ஐரோப்பாவிற்குப் புகலிடம் தேடிவரும் இந்த அகதிகளின் எண்ணிக்கையைச் சமாளிக்க முடியாததாகவும் அவர்கள் நாடுகளின் எல்லைகளை விரிவாக்கவும் வேண்டியதாய் உள்ளது. இந்தப் பிரச்சனை வேதாகமத்தின் பரிமாணம் என்கிறார் தன்னாட்சி கட்சியைச் சார்ந்த பிரிட்டனின் சட்டம் இயற்றுபவரான நைஜீன் பாரேஜ் (Nigel Farage).

பெர்சியா வளைகுடா நாடுகள், 1951 ஒப்பந்தத்தில் பங்கு ஏற்காததால், ஒரே மொழி பேசினாலும், புவியியல் ரீதியாக அண்மையில் இருந்தாலும் அகதிகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். 2011-இல் அந்த நாட்டில் போர் துவங்கியது முதல் அமெரிக்காவும் கனடாவும், 1500 அகதிகளை மட்டுமே மனிதாபிமான உதவிகள் செய்துள்ளது.

### மத்திய கிழக்கு மாநிலங்களை மாற்றியமைத்தல்

சிரியாவிலும், ஈராக்கிலும் நடந்துக்கொண்டிருக்கும் குழப்பத்தால் மக்கள் தொகையில் துல்லியமாக எத்தனை பேர் இடமாற்றம் செய்தார்கள் என்பதை முடிவு செய்வது எளிதானதல்ல. ஏறக்குறைய நான்கு மில்லியன்

சிரியர்கள் நாட்டைவிட்டுத் தப்பி ஓடினாலும், இன்னும் 6-7 மில்லியன் மக்கள் உட்புறத்திலேயே இடம் பெயர்க்கபட்டுள்ளனர்.

இவ்வாறாக, சிரியாவின் பாதி மக்கள் தொகையாகிய 20 மில்லியன் மக்கள் தொகை, போருக்கு முன்பே வலுகட்டாயமாக தங்கள் இல்லங்களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் மற்றும் மற்ற சிறுபான்மையினரின் தாக்குதலைக் கண்டித்து, மார்சு 2015-இல் ஐரோப்பா பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. அவர்கள் கூறுகையில் 1.1மில்லியன் சிரிய கிறிஸ்துவர்களில் 700,000 மேற்பட்டோர் தங்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர் என்றார்கள். 2003 போருக்கு முன்பு ஈராக்கில் கிறிஸ்துவ ஜனத்தொகை 1.4 மில்லியனுக்குமேலாக இருந்தது. தற்போது 350,000 குறைவாக உள்ளது என்று மதிப்பீடுகள் கூறுகிறது. பாதுகாப்பு கருதி வடக்கு திசையில் உள்ள குர்திஷ் (Kurdish) கட்டுப்பாட்டிற்குள் ஈராக் கிறிஸ்தவர்கள் சென்றாலும், இப்பொழுது ISIS ஆல் அச்சுறுத்தப்படுகிறார்கள்.

பல கிறிஸ்தவர்கள் தங்கள் நாடுகளை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டதால், ஜூலை 2015 New York Times என்ற பத்திரிகை இவ்வாறு ஒரு அறிவிப்பை வெளியிட்டது. "மத்திய கிழக்கு பகுதிகளில் இதுதான் கிறிஸ்துவத்தின் முடிவோ?" மற்ற எந்த மத வகுப்பாரையும்விட பல நாடுகளில் கிறிஸ்தவர்களே பல அடக்கு முறைகளைச் சந்திக்க நேர்கிறது என்கிறது ப்யூவின் (Pew)ஆய்வு.

**தேவனின் தீர்வு**

இந்த நேரத்தைக் குறித்தே இயேசு கிறிஸ்து முன்னறிவித்தார், "சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்" (லூக்கா 21:25, 26) "கொந்தளிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைக்குப் பொருள் - "வெளியே போக வழியில்லை."

அகதிகளின் நெருக்கடியால் தொடர்ந்து பல வருடங்களாகப் பல நாடுகளின் மத்தியிலும், நாடுகளுக்குள்ளும் முடிவில்லா போர்களையே கொண்டு வந்துள்ளது. எதிரிகள் மாறினாலும், அதன் பின்விளைவுகள் ஒரேவகையாகத்தான் இருக்கிறது. தற்சமயம் பயமும், உறுதியின்மையும்தான் படிவமாய் இருக்கிறது. ஐரோப்பா மற்றும் அமெரிக்கா அரசாங்கம் நீண்ட நாட்களுக்கு முன்பு ஏற்படுத்திய தீர்மானங்களை எப்படி பேணி காக்க முடியும் என்று எண்ணுகிறார்கள். பல வழிமுறைகளில் எது தெளிவான வழி என்று அறிந்துகொள்ள முடியாமல், பல வழக்குகளில் தவிர்க்கமுடியாத நெருக்கடிகளில் தற்காலிக திருத்தல்களையே செயல்படுத்துகிறார்கள்.

"ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான், இணைத்தால், அதினோடே இணைத்த புதியதுண்டு பழையதை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும்" (மாற்கு 2:21) என்று இயேசு கிறிஸ்து கூறினார். நம் காலத்தைக்குறித்து, "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்" (தானியேல் 12:1) என்று தானியேல் கூறுகிறார்.

வெளியே செல்லும் வழியை தேவன் வழங்குவார். முழு மனுக்குலத்திற்கும் இரட்சிப்பின் வழி என்கிறார் இயேசு கிறிஸ்து. எல்லா வகையிலும் நிறைவான அவருடைய வார்த்தைகளை நிலைநாட்டுவேன் என்ற அவருடைய வாக்குறுதியாகிய கிறிஸ்துவின் இந்தப் பூமிக்குரிய இராஜ்யம் அல்லது அரசாங்கமே, தேவன் இந்த விழுந்துபோன மனுக்குலத்திற்குக் கொடுக்கும் தீர்வாகும். தேவன் நமக்குக் கொடுத்த மிக உயர்ந்த வாக்குத்தத்தத்தின் சிறப்பம்சம் - நம்முடைய மேசியாவாகிய இராஜா இயேசு. "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்;

நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசாயா 9:6, 7).

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் மீகா 4:1-4-இல் கூறுப்பட்டுள்ளது. "ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று" (மீகா 4:1-4).

தேவன் தமது வரும் இராஜ்யத்தை மலைக்கு ஒப்பிடுவது மிக இசைவானதாய் உள்ளது. இதுவரை கண்டிராத இன்னும் வல்லமையான இராஜ்யத்தை இந்தப் பூமியில் நிறுவுவதாக தேவன் வாக்களிக்கிறார். வீடுகள் தேடி இனி அகதிகள் போராடமாட்டார்கள் அல்லது எந்த நாடும் இனி அவர்களைக் குடிவைக்க போராடாது. இந்த இராஜ்யத்தில் அனைவருக்கும் ஓர் இடமும் ஒரு நோக்கமும் உண்டு. இந்த இராஜ்யத்தில் யாரும் அவர்களை திகிலடையவோ அல்லது அவர்களை விரட்டிவிடவோ இயலாது. இது பூரணமாய் நிறுவப்பட நாம் ஆர்வத்தோடு ஜெபம் செய்வோம்.

**சங்கிலியாண்டபுரம் தேவமாணவர்கள்**, திருச்சி.

**கைப்பேசி : 924461141,8122224919**